★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆனி 31 ஷவ்வா 4 இதழ் 154

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 15—7—83

## யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலய ஆய்வு கூடத்தில் அதிகாலை நிகழ்ந்த கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலய விஞ்ஞான ஆய்வுகூடம் உடைக்கப்பட்டு இரசாயனப்பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை இச் சம்பவம் நிகழ்ந்தது.

கொள்ளையடித்தவர்கள் மூன்று டின்களில் குண்டுகளையும் வைத்துவிட்டுச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை சுமார் 4 மணியளவில் ஐந்துபேர் துப்பாக்கி முனையில் மேற்படி மகாவித்தியாலயக் காவலாளியைத் தடுத்துவைத்து விஞ்ஞான ஆய்வுகூடக்கதவை உடைத்து கொள்ளையடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனாலும் ஆய்வுகூடத்துள் இருந்த அலுமாரிகள் ஒன்றுமே உடைக்கப்படவில்லையாம்.

ஆய்வுகூட உதவியாளர் லீவில் சென்றுள்ளதால் இரசாயனப்பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்ட விபரம் தெரியவில்லையாம்.

யாழ்.பொலிசார் மகாவித்தியாலய ஆய்வுகூடத்தைச் சென்று பார்வையிட்டபோது மூன்று டின்களில் குண்டுகள் வைக்கப்பட்டிருந்தது தெரியவந்ததாம்.

வித்தியாலய காவலாளி வி. சுவாமிநாதன் என்பவர் சாட்சியமளித்துள்ளார். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

(மா)

# வட்டமேசை மகாநாடு: கூட்டணி கலந்து கொள்ளாது?

## கம்யூனிஸ்ட் கட்சி பகிஷ்கரிக்கும்; ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நிலையும் சந்தேகம்

(நமது அரசியல் நிருபர்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பயங்கரவாத நடவடிக்கைகளை ஒழிப்பது சம்பந்தமாக அரசு கூட்டும் வட்டமேசை மகாநாட்டில் தமிழர் விடுதலைக்கூட்டணி கலந்துகொள்ளமாட்டாது எனத் தெரிய வருகிறது.

இம் மகாநாட்டில் கம்யூனிஸ்ட்கட்சி கலந்துகொள்ளமாட்டாது என்று அறிவித்துள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அநேகமாகக் கலந்துகொள்ளாது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பயங்கரவாத நடவடிக்கைகளை ஒழிப்பது சம்பந்தமாக ஆராய்ந்து முடிவெடுக்க, பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளைக் கொண்டவட்டமேசை மகாநாட்டைக்கூட்டுவதென்று நேற்று முன்தினம் அமைச்சரவை முடிவு செய்திருந்தது தெரிந்ததே. இதுசம்பந்தமான கடிதங்கள் தமிழர் விடுதலைக்கூட்டணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, கம்யூனிஸ்ட், மக்கள் ஐக்கிய முன்னணி செயலாளர்களுக்கு நேற்று முன்தினம் அனுப்பிவைக்கப்பட்டன.

### கூட்டணி நிலைமை

இம் மகாநாடு சம்பந்தமாகத் தமிழர் விடுதலைக்கூட்டணியைச் சேர்ந்த சில எம். பி.க்களுடன் நேற்றுத் தொடர்பு கொண்டபோது பயங்கரவாதம் சம்பந்தமான மகாநாட்டில் கலந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று கருத்துப்படத் தெரிவித்தனர்.

''தமிழ் இளைஞர்களைப் பயங்

(8-ம் பக்கம் பார்க்க)

## இன்று பாடசாலைகளைப் பகிஷ்கரிக்க தமிழ் மாணவர் பேரவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

திருமலை அசம்பாவிதங்கள், கல்லூரி மாணவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் எவ்வித காரணமுமின்றித் தாக்கப்படுதல், கைதுசெய்யப்படுதல், தமிழ் இளைஞர் பேரவைச் செயலாளர் இரா. பன்னீர்ச் செல்வம், தமிழ்ஈழ விடுதலைஅணி உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டது முதலானவற்றுக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் வகையில் இன்று வெள்ளிக்கிழமை பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழில் நுட்பக்கல்லூரிகள் அனைத்தையும் மாணவர்கள் பகிஷ்கரிக்கும்படி கேட்டுக் கொள்ளும் பிரசுரமொன்றைத் தமிழ் மாணவர் பேரவை வெளியிட்டுள்ளது.

நேற்றும் யாழ்ப்பாணத்தில் பல பாடசாலைகளில் மாணவர்கள் வரவு பெரிதும்வீழ்ச்சியடைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

(அ)

## மன்னார் சம்பவம்: இளைஞர்கள் பலர் மீண்டும் விசாரணை

(மன்னார்)

மன்னார் ஆஸ்பத்திரியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஜீப் எரிப்புச் சம்பவம் தொடர்பாக, அப்பகுதியில் கைதுசெய்யப்பட்டு, விசாரணைக்குட்படுத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட 19 இளைஞர்களில் இருவரை தள்ளாடி இராணுவமுகாமிற்கு மீண்டும் விசாரணைக்கு வரும்படி இராணுவத்தினர் அழைத்துள்ளனர்.

இவர்களுடன் மேலும் நான்கு இளைஞர்களும் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

மன்னாரில் நேற்றும் சில வீடுகள் இராணுவத்தினரால் சோதனையிடப்பட்டன.

மன்னாரில் இடம்பெற்றுவரும் அசம்பாவித சம்பவங்களைத் தடுப்பது தொடர்பான பாதுகாப்பு மாநாடு நேற்று மன்னார் செயலகத்தில் அரசாங்க அதிபர் திரு. ஜே. செந்தில்நாதன் தலைமையில் நடைபெற்றது.

## கடற்றொழில் வானுக்கு தீவைப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். கடற்றொழில் பயிற்சிக் கல்லூரி நிலயத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வான் ஒன்றுக்கு வைக்கப்பட்ட தீ உரிய நேரத்தில் அங்குள்ள ஊழியர்களால் அணைக்கப்பட்டது.

இத்திவைப்பினால் வானின் இரு ஆசனங்கள் மாத்திரம் எரிந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது,

நேற்றுப் பகல் இத்தீவைப்புச்சம்பவம் நிகழ்ந்தது. 2ம் குறுக்குத்தெருவில் இந்த நிலையம் இருக்கிறது.

திடீரெனத் தீப்பிடித்ததைத் தொடர்ந்து அப்பொழுது அங்கிருந்தவர்கள் தீயை அணைத்தனராம். யாழ். பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

(மா)

## வட்டு. தொகுதியில் 3 உப தபாலகங்களில் 4 இளைஞர்கள் கைவரிசை!

[பண்டத்தரிப்பு-சுழிபுரம் நிருபர்கள்]

வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள சித்தங்கேணி, பண்ணாகம், பிரான்பற்று ஆகிய மூன்று உபதபால் அலுவலகங்களில் உட்புகுந்த நான்கு இளைஞர்கள் கத்திமுனையில் அங்கிருந்தவர்களை மிரட்டி தொலைபேசிகளைத் துண்டித்து உடைமைகளைச் சேதப்படுத்தியதுடன் ரொக்கப்பணத்தையும் எடுத்துச் சென்றுள்ளனர். நேற்

[8-ம் பக்கம் பார்க்க]

உ

புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் ருதிரோற்காரி வருடம் ஆனி மாதம் 31ந் திகதி இன்று (15-7-83) வெள்ளிக்கிழமை முற்பகல் 9-30 மணிமுதல் 10 மணிவரை வரும் சுபமுகூர்த்தவேளையில்

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

அலங்கார் நகைமாளிகை

என்னும் வர்த்தக நிலையத்தை ஆரம்பித்து நடாத்த நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் சமுகந்தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தேவிவிலாசா கட்டிடம்
2 1/7, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

இங்ஙனம்
உரிமையாளர்கள்

(7968)

## யாழ். ரயில் நிலையத்தை முற்றுகையிட்ட இராணுவம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். புகையிரத நிலையம் தாக்கப்படுவதாகக் குருநகர் இராணுவ முகாமுக்குக் கிடைத்த தொலைபேசித் தகவலின்பேரில் இராணுவ வீரர்கள் உடனடியாகப் புகையிரத நிலையம் சென்றபோது அங்கு எதுவித சம்பவமும் நிகழாதது கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று நண்பகல் 12-30 மணியளவில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெருந்தொகையான இராணுவ வீரர்கள் அதிவேகமாக யாழ். புகையிரத நிலையம் வந்து முற்றுகையிட்டபோது, அப்பொழுது கடமையிலிருந்த

(8-ம் பக்கம் பார்க்க)

ஸ்கந்தா பரிசளிப்பு விழா
நேர மாற்றம்

காலம்: 15-7-83
நேரம்: மு. ப. 10-00 மணி

அன்புடன் அழைக்கின்றோம்.

சுன்னாகம். அதிபர்.

[7983]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

குடியிருக்க வசதியானதும், பாடசாலை, மின் வசதியுள்ளதுமான 8 பரப்புக் காணி மட்டுவில் தெற்கில் நுணுவில் பருத்தித்துறை செல்லும் வீதிக்கு அண்மையில் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு:- செ. குமாரசாமி (இளைப்பாறிய பொலிஸ்), மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. 7929

பரந்தன் D, ஐந்தாம் வாய்க்கால் என்னுமிடத்தில் 7 ஏக்கர் நெற்காணி இரு போகம் செய்யக்கூடிய நீர்ப்பாசன வசதியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு செ. அம்பிகைபாலன், சட்டத்தரணி, ஜே. பி. யூ. எம். 9, கண்டி வீதி, சாவகச்சேரி, தொலைபேசி: 262. 7963

நல்ல நிலைமையில் வேலை செய்துகொண்டிருக்கும் பெரிய எலக்ரோலக்ஸ் (Elecrolux) குளிர்சாதனப்பெட்டி விற்பனைக்கிருக்கின்றது. விண்ணப்பிக்கவும். விளம்பர இல:7944, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 7944

யாழ்ப்பாணம் நல்லூர் செம்மணி வீதி 98ம் இலக்கத்தில் கல்விக்கந்தோருக்கு முன்பாக வீடு கட்டுவதற்குரிய மூன்று பரப்புக்காணி விற்பனைக்குண்டு, விபரங்களுக்கு நேரில் வரவும். 7970

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி 274ம் இலக்கத்தில் உள்ள சி. எஸ். கே. கட்டடத்தில் (C.S.K.) உள்ள புதிய கடை ஒன்று வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு:- முகாமையாளர் சி. எஸ். கே. ஸ்தாபனம் 133, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 7943

இலக்கம் 133, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணத்தில் புதிதாகக்கட்டப்பட்டிருக்கும் / கட்டப்படவிருக்கும் கடைகள் வாடகைக்குத் தேவைப்படுவோர் உடனடியாகப் பதிவு பதிவுசெய்து கொள்ளவும். விபரங்களுக்குமுகாமையாளர், சி. எஸ். கே. ஸ்தாபனம் 133, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 7942

## தேவை

யாழ் பகுதி ஐக்கிய நாணய சங்கங்களில் சமாஜத்திற்கு நிர்வாகச்செயாளருக்கு உதவியாளராகக் கடமையாற்ற ஒரு உதவியாளர் தேவை. தகமைகள்; க. பொ. த. சாதாரணம் ஆறு பாடங்கள் (கணிதம், ஆங்கிலம் தட்டச்சு உட்பட கூட்டுறவுப் பயிற்சி அவசியம். விண்ணப்பப்படிவங்கள் ரூபா 2 செலுத்தி சமாஜக் காரியாலயம் 2ம் மாடியில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பமுடிவு திகதி யூலை 30. சொந்தக்கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். பயிற்சிக்காலத்தில் 250 ரூபா மட்டும் படியாக வழங்கப்படும். காரியதரிசி ஐ. நா. ச. சமாஜம். 7974

## தேவை

யாழ்ப்பாணம், மானிப்பாய், சண்டிலிப்பாய், உடுவில், திருநெல்வேலி பகுதியில் வீடு கட்டக்கூடிய காணி தேவை. மூன்று பரப்பளவில் இருக்கவேண்டும். முழு விபரத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 7964, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (7964)

## காணவில்லை

வலந்தலை சந்திக்கும் பொன்னாலை சந்திக்கும் இடையில்வானுடைய ''வீல்கப்'' தவறிவிட்டது. ஒப்படைத்தால்சன்மானம்வழங்கப்படும். கனகசபாபதி சன்ஸ் 106 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7975

## தவறிவிட்டது

எனது மோட்டார் வாகனம் செலுத்தும் லைசென்ஸ் No; 129143 சென்ற 7ம் திகதி கே. கே. எஸ். வீதியில் தவறிவிட்டது. அதை கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ் காணும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும். தகுந்த சன்மானம் கொடுக்கப்படும். சி. சண்முகநாதன் மானிப்பாய் வடக்கு, மானிப்பாய். 7971

## WANTED

Production Trainees for a Leading Export Oriented Sea Food Organisation, Persons holding the following qualifications need apply A'Level with minimum 3 Subjects. English and Science Subjects Director Finance Andriesz and Co Ltd.Kandy Road, Navatkuly Kaithady. 7977

யாழ்ப்பாணம்
அபிவிருத்திச்சபையின்

## கேள்வி அறிவித்தல்
### திருத்தம் – 1983

ஈழநாட்டுப் பத்திரிகையில் 11-07-83ந் திகதியிலும், வீரகேசரிப் பத்திரிகையில் 13-07-83ந் திகதியிலும் விளம்பரப்படுத்தப்பட்ட எனது 7-7-83ம் திகதிய கேள்வி அறிவித்தல் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

கேள்விப் பத்திரங்கள் 22-07-83ம் திகதி நண்பகல் 12-00மணிவரைவழங்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் 25-07-83ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

**தேவநேசன் நேசையா**
செயலாளர்
யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை

யாழ். அபிவிருத்திச்சபை,
யாழ்ப்பாணம்.
13-07-83. 7972

''கிளிநொச்சிக் கல்வி அபிவிருத்தியில்

# தனியார் கல்வி நிலையங்களும் அக்கறை காட்டவேண்டும்''

(கிளிநொச்சி)

''கல்வியில் பின் தங்கிய நிலையிலிருந்து முன்னேறிவரும் கிளிநொச்சியின் கல்வி அபிவிருத்தியில் தனியார் கல்வி நிலையங்களும் பெரும் அக்கறைகாட்ட வேண்டுமென்று கிளிநொச்சி விஞ்ஞானக்கல்விநிலைய 7வது ஆண்டு நிறைவுப் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் கிளிநொச்சி கொத்தணிப் பாடசாலைகளின்அதிபர் திரு. இரா. சின்னத்தம்பி கூறினர்.

நிலைய அதிபர் திரு. ஆ. கனகசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக அருட்திரு. ரி. ஏ, ஜே. மதுரநாயகம் கலந்து கொண்டார்.

கொத்தணி அதிபர் இரா. சின்னத்தம்பி தொடர்ந்து பேசுகையில்:

''மாணவர்கள் கல்வியில் முன்னேற வேண்டுமாயின் ஒழுக்கத்தில் சிறந்தவர்களாக விளங்கவேண்டும். ஒழுக்கம் உயர்வைத்தரும். கிளிநொச்சி கல்வியில் பின்தங்கிய நிலையிலிருந்து இன்று கல்வியில் முன்னேறிவருகிறது. இம்முன்னேற்றத்திற்கு தனியார் பாடசாலைகளும் பெரும் அக்கறை கொண்டு செயற்பட்டுவருவது பாராட்டிற்குரியது.

விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபலரும் விஞ்ஞானக் கல்விநிலையம் ஆற்றிவரும் சேவைக்கு பாராட்டுத்தெரிவித்தனர்.

வணபிதா. மதுரநாயகம் மாணவர்களுக்கானபரிசில்களை வழங்கினர். கவியரங்கு உட்பட வானொலிக் கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றது.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றத்தில்

உடுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பாப்பிள்ளை பெரியதம்பி என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தின் விடயத்தில்

— மரணமெய்தியவர்

தம்பாப்பிள்ளை பெரியதம்பி கைம்பெண் தங்கம்மா, உடுவில் கிழக்கு, உடுவில்,

— மனுதார்

மரணசாதன
நியாயாதிக்கம் இல: 157

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள்எவரும், 1983ம் ஆண்டு ஆவணி மாதம் 3ஆந் நாளன்று முற்பகல் 9-15 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்ருன தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்.

1983ம் ஆண்டு வைகாசி மாதம் 13ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி
**ஆ. சிவபாதசுந்தரம்**
பதிவாளர்

என்னல் வரையப்பட்டது
**செ. இராமலிங்கம்**
மனுதாரின் சட்டத்தரணி
7761


விசா இல்லாமல்

சிங்கப்பூர், லண்டன், கனடா, மலேசியா, கொங்கொங், சம்பியா அல்லது பாகாமா
ஆகிய நாடுகளுக்கு செல்ல


- விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை
வங்கியின் கட்டணத்தில்
- விமான ஆசன பதிவுகள்

மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைக்கும்
இன்றே நாடுங்கள்

**மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்டட்**

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(ZAMBIAN AIRWAYS பிரதான விற்பனைப் பிரதிநிதி)
General Sales Agents
த. பெ. எண்: 92 போன்: 24154


## 1-வது ஆண்டு நினைவஞ்சலி



செல்வி சசிகலா பத்மநாதன்

தோற்றம்: 28-12-74 மறைவு: 15-6-82

எங்கள் அன்புத் தெய்வமே எங்களை விட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்ருனலும் உனது அன்பு நினைவுகள் என்றென்றும் எங்களை விட்டகலாது. உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

அன்பு அம்மா, அண்ணன்மார், மாமாமார், சித்தப்பாமார், மற்றும் உற்ருர் உறவினர்கள்.

பத்மநாதன் சகுந்தலா,
(7978) ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.


சகலவித றேடியோ — ரி. வி — வீடியோ டெக் — மணிக்கூடுகள்
சிறந்த முறையில் திருத்திக்கொள்ள

**வீனஸ் றெக்கோடிங் றேடியோ வாச் வேக்ஸ்**

266/1, ஸ்ரான்லி வீதி, (ஸ்ரீதர் தியேட்டர் அருகாமை), யாழ்ப்பாணம்.

# மரணதண்டனை விதிக்கும் பிரேரணை பிரி. பாராளுமன்றத்தில் படுதோல்வி!

## எதிர். - 361; ஆதரவு - 245

**லண்டன், ஜூலை, 14**

**ஆகக்கூடிய தண்டனையான மரண தண்டனை விதிப்பதை மீண்டும் அமுலாக்கும் வகையில் நேற்று பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணை படுதோல்வியடைந்தது. 361 வாக்குகள் இப்பிரேரணைக்கு எதிராகவும் 245 வாக்குகள் இப்பிரேரணைக்கு ஆதரவாகவும் கிடைத்தன.**

நீண்ட நேரமாக இப்பிரேரணை மீதான விவாதம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இடம்பெற்றது. ஆளுங் கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சிப் பிரதிநிதிகள் மரண தண்டனை விதிக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திக் காரசாரமாக வாதிட்டனர்.

ஆயினும், வாக்கெடுப்பின்போது இப்பிரேரணைக்கு எதிராகவே பிரதிநிதிகள் சபையிலிருந்த பலரும் வாக்களித்தனர். நூற்றுப் பதினறு அதிகப்படியான வாக்குகளால் இப்பிரேரணை தோற்கடிக்கப்பட்டது. அதி பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றிய கன்சர்வேட்டிவ் ஆட்சியாளரால் இம்மரண தண்டனை வழங்கும் பிரேரணை கொண்டுவரப்பட்டபோதிலும், பாராளுமன்றத்தில் இது தோல்வியடையுமென்றே பலராலும் எதிர்பார்க்கப்பட்டது.

இப்பிரேரணை பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டதையடுத்து பிரிட்டனில் பல பாகங்களிலும் இதனை ஆதரித்தும், எதிர்த்தும் மக்கள் விவாதங்கள், கருத்தரங்குகள், பொதுக்கூட்டங்கள் என்பனவற்றை நடத்தினர். பல பொது ஸ்தாபனங்களும் இவற்றில் பங்கெடுத்திருந்தன.

பிரிட்டனின் பிரதான மதமான புரொட்டஸ்தாந்து மதத் தலைவர், மற்றும் கத்தோலிக்க மத் அதிமேற்றிராணியார் ஆகியோரும் மரணதண்டனை விதிக்கப்படுவதை ஆட்சேபித்துக் கூட்டமொன்றை நடத்தியிருந்தனர்.

கன்சர்வேட்டிவ் கட்சி கடந்த மாதம் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் முதல் தடவையாக அதனுல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுத் தோல்வியடைந்த பிரேரணை இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (கி)

## தையல் இயந்திரம் கையளிப்பு

(பண்டத்தரிப்பு)

பனிப்புலம் அம்பாள் கிராம அபிவிருத்திச்சங்க தையற் பயிற்சி நிலையத்திற்கு தையல் இயந்திரம் ஒன்றை வலிமேற்கு உதவி அரசாங்கஅதிபர்வழங்கியுள்ளார்.

## கடத்தல் பொருட்கள் சிக்கியது

(சுண்டிக்குளி)

யாழ். நகரில் இருந்து கொழும்பு செல்ல இருந்த பிரயாணி ஒருவருடைய பொதிகளை சோதனையிட்ட யாழ். பொலிசார், அப்பொதிகளில் முப்பது இந்திய சாரிகளும், பத்து வேட்டிகளும் இருக்கக் கண்டுபிடித்தனர்.

பொருட்களையும், அப்பிரயாணியையும் யாழ். சுங்கப் பகுதியில் ஒப்படைத்தனர். யாழ். சுங்க சேகரிப்பாளர் திரு. எஸ். எம். ஜே. சேனரத்தின பொருட்களைப் பறிமுதல்செய்து, ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

# "நல்ல பழக்க வழக்கங்களை மாணவர்கள் பேணவேண்டும்"

## வடமாநில கல்விப்பணிப்பாளர் கூறுகிறுர்

(மாவிட்டபுரம்)

''தனியார் கல்வி நிலையங்கள் மாணவர்களது பழக்க வழக்கங்களை தீயவழிகளில் ஈடுபடுத்த வழிசமைக்கின்றன. பாடசாலைகளில் மாணவர்கள் கொண்டிருக்கும் பழக்கவழக்கங்கள் வேறு. தனியார் கல்வி நிலையங்களில் பின்பற்றும் பழக்கவழக்கங்கள் வேறு. பல்கலைக்கழகம் செல்ல தனியார் கல்வி நிலையங்களை ஓர் குறுக்கு வழியாகக் கொண்டு மாணவர்கள் செயல்படுகிறுர்கள். கல்வியுடன் நல்ல பழக்கவழக்கங்களும் அவசியமானபடியால் மாணவர்கள் அதிலும் கவனம் செலுத்தவேண்டும்''.

இவ்வாறு காங்கேசன்துறை நடேஸ்வரக்கல்லூரி பரிசளிப்பு விழா, நிறுவுனர் நினைவுவிழா ஆகியவற்றில் கலந்துரையாற்றிய வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை கூறினுர்.

கல்லூரி அதிபர் திரு. து. பாலசிங்கம் தலைமையில்நடந்த இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

வடமாநில பாடசாலைகளில் கல்விநிலை மோசமான நிலைக்கு வருவது கவலை தருகிறது. பட்டதாரி ஆசிரியர்கள் கடமையை விட்டு வெளிநாடு செல்வதால் ஆசிரியர் பற்றுக் குறை நிலவுகிறது. புதிய கல்வித்திட்டம் புகுத்தப்பட்டபோதும் அதில் புதிதாக திட்டமெதுவும் இல்லை. பழைய கலவித் திட்டத்தையே மாற்றியமைத்துள்ளனர், இந்நிலையில் மாணவர்களது நாட்டம் தனியார் கல்வி நிலையங்களையே அடைகிறது. பல்கலைக்கழகம் செல்லும் குறுக்கு வழியாக தனியார் கல்வி நிலையங்கள் அமைந்துவிடுகின்றன.

கொத்தணி பாடசாலைமுறை இன்று அமுல்படுத்தப்படுகிறது. இது நன்மை பயக்கும் திட்டமாகவே விளங்குகிறது. ஏனைய இடங்களிலும் இதனை விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். புங்குடுதீவு, கிளிநொச்சி ஆகிய இடங்களில் இத்திட்டம் சிறப்பாக செயல்பட்டுவருகிறது'' என்றுர்.

கல்லூரி பழைய மாணவரும், முன்னுள் ஆசிரியருமான திரு. க. பரஞ்சோதி நிறுவுனர் நினைவு பேருரை நிகழ்த்திஞர்.

திரு. எம். சிமியாம்பிள்ளை பரிசில்கள் வழங்கிஞர்.

## தெய்வத் தமிழ் மன்றம் அங்குரார்ப்பணம்

சென்னை, ஜூலை 14

தெய்வத் தமிழ்மன்றம் ஒன்று மயிலாடுதுறையில் (மாயவரத்தில்) இம்மாதம் 24ம் திகதி அமைக்கப்படவிருக்கிறது.

தமிழகத்திலும் இலங்கை, மலேசியா போன்ற தமிழர் வாழ்கின்ற இடங்களிலுமுள்ள சைவசமயத் திருமுறை மன்றங்களை ஒன்றுபடுத்திச் செயற்பட வைப்பதும் தமிழ்நாட்டின் மாவட்டங்களிலும் இலங்கை மலேயா போன்ற இடங்களிலும் ஆண்டுதோறும் கூடுதலும், திருமுறைகளையும் சைவப் பேரிலக்கியங்களையும் பரப்புதலும் இம்மன்றத்தின் குறிக்கோள்களாகவிருக்கும்,

இம்மாதம் 24ம் திகதி காலை இம்மன்ற ஒருங்கிணைந்த செயல்முறைக் கூட்டம் நடைபெறும்.

மயிலாடுதுறையிலுள்ள மாதானத்தெருவில் விளங்கும் குருஞானசம்பந்தர் பணிமன்றப் பாலர்பள்ளி நிலையத்தில் இவ்வங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெறும். (ப)

---

வரதட்சணைக்கொடுமை:

## பெண்களுக்கு ஆதரவு வழங்க சமூகநலத்துறை அமைச்சு முடிவு!

புதுடில்லி, ஜூலை, 14

வரதட்சணைக் கொடுமைகளுக்குள்ளாகும் பெண்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்ளவும், அக்கொடுமைக்கெதிராகப் பிரசாரம் செய்யவும் ஆதரவு வழங்க மத்திய சமூக நலன்துறை அமைச்சு முன்வந்துள்ளது.

நேற்று புதுடில்லியில் நடைபெற்ற சமூகநலன்துறை அமைச்சு அதிகாரிகளின் மகாநாட்டில் மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டது. வரதட்சணைக் கொடுமைகளுக்குள்ளாகும் பெண்களுக்கு நல்லாதரவு வழங்கி அவர்களை மறுவாழ்வு பெறச்செய்யும் வகையில் சகல சமூகசேவை ஸ்தாபனங்களும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் இம்மகாநாட்டில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

வரதட்சணைக் கொடுமைகள் புரிவோரைத் தண்டிக்கும் புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுமென்றும் மத்திய சமூக நலன்துறை அமைச்சுத் தெரிவித்தது. (கி)

## "நேபாளத்தில் தூய்மையான நிர்வாகம் இடம்பெறும்!"

### புதிய பிரதமர் நம்பிக்கை!

காா்ட்மண்டு, ஜூலை,14

''தூய்மையான ஆட்சி அமைக்கஉரியநடவடிக்கைகளை எடுப்பேன்'' என்று புதிய நேபாள பிரதம மந்திரி திரு. லோகேந்திர பகதூர் சான்ட் அறிவித்தார்.

திரு. லோகேந்திர பகதூர் சான்ட் நேற்று நேபாள மன்னர் பிரேந்திரா முன்னிலையில் புதிய நேபாள பிரதம மந்திரியாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவரின் வயது 44 ஆகும். சட்டத்தரணியான இவர், முன்பு நேபாள பாராளுமன்ற சபாநாயகராகவும் பதவி வகித்துள்ளார்.

அமைதியான சுபாவமுள்ள திரு. லோகேந்திர பகதூர் சான்ட், நேர்மையானவர் என்று வர்ணிக்கப்படுகிறுர். ஆனுல் கடுமையான முடிவுகளை எடுக்கமுடியாதவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தில் புதிய அமைச்சரவை தெரிவு செய்யப்பட்டுள்ளபோதிலும், நேபாள அரசின் வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றமிருக்காதெனஅறிவிக்கப்பட்டது. (கி)

## மேற்கு நாடுகளில் வேலை இல்லாப் பிரச்னை!

ஜெனீவா, ஜூலை 14

கைத்தொழில் வளர்ச்சி பெற்ற மேற்கத்திய நாடுகளில் மூன்று கோடி பேர் வேலையில்லாமல் இருக்கின்றனர் என்று இவ்வாண்டின் ஆரம்பத்தில் நடத்தப்பட்ட சுற்றுய்வின் புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ளன. மிக வளர்ச்சி பெற்ற நாடுகளான பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் முறையே நான்கு பேருக்கு ஒருவரும் 5 பேருக்கு ஆருவரும் ஆண்டுதோறும் வேலையில்லாதவர் பட்டாளத்தில் சேர்ந்துவிடுகிறுர்கள் என்பதும் தெரியவந்துள்ளது-

வேலையில்லாத்திண்டாட்டம் இந்நாடுகளின் சமூகத்தில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. பொருளாதார வளர்ச்சி வீதம் குறைந்துள்ளது, தேர்ச்சித் திறன் அற்ற மேலதிக தொழிலாளர்கள் சந்தையில் மேன்மேலும் புதியவர்கள் சேர்ந்து வருகின்றனர். இதற்கான பிரதான காரணங்களில் ஒன்று ஆயுதப் போட்டியே என்பதும் புள்ளி விவரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

அமெரிக்க பொருளியலாளர்களின் மதிப்பீடுகளின் பிரகாரம் ஆயுத உற்பத்திக்காகச் செலவிடும் 100 கோடி டாலர்களின் மூலம் நாட்டின் சமூகத் தேவைக்கான உற்பத்தித் துறையில் 14,000 பேருக்கான வேலைகளை உருவாக்கமுடியும். இதே 100கோடிடாலர்களைவர்த்தக, கல்வி நிர்மாணத்துறைகளில் மூலதனமிட்டால் முறையே 65,000, 52,000 48,000 பேருக்கு வேலைவாய்ப்பளிக்கமுடியுமென்றும் அமெரிக்க பொறியியலாளர்கள்கூறுகிறுர்கள்.

வேலையில்லாதோர் பட்டாளத்தில் புதிய வகையானவர்களும் அண்மைக்காலத்தில் சேர்ந்துள்ளனர். கரத்தால் உழைப்பவர் மட்டுமல்ல, கருத்தால் உழைப்பவர்களும் அறிவுஜீவிகளும் கூட இதில் சேர்ந்து வருகின்றனர். பொறியியல், தொழில்நுட்ப நிபுணர்கள், நிர்வாகத் துறையினர் ஆகியோரை இதற்குக் உதாரணம் காட்டலாம்.

வேலையில்லாதோரில் 40 சதவீதத்தினர் 25 வயதுக்குட்பட்டவர்கள் வேலையில்லாத் திண்டாட்டம் சமூகத்தில் விரக்தி, மனநோய், தற்கொலை மற்றும் கொலை, கொள்ளை, போதைவஸ்து பாவனை போன்ற குற்றங்களுக்கும் காரணமாக அமைந்துள்ளது என்றும் மேற்படி சுற்றுய்வை நடாத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்,

## "பொதுநலவாய மாநாடு சர்வதேச நெருக்கடிகளைத் தீர்க்க உதவும்!

— கலாநிதி ரம்பால்.

புதுடில்லி, ஜூலை, 14

''இந்தியாவில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் உச்சிமகாநாடு சர்வதேசப் பிரச்னைகள் பலவற்றுக்குத் தீர்வுகாண வழிவகுக்கும்'' என்று இந்தியா வந்துள்ள பொதுநலவாய அமைப்பின் பொதுச் செயலாளர் கலாநிதி ஸ்ரீதத்ரம்பால் தெரிவித்தார்.

அவர் மேலும், அம்மகாநாட்டில் நமீபியப் பிரச்னை குறித்த பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படுமென்றும் நம்பிக்கை தெரிவித்தார். பொதுநலவாய அமைப்பின் உச்சி மகாநாடு எதிர்வரும் நவம்பர் 23ம் திகதி புதுடில்லியில் நடைபெறவுள்ளது. சுமார் நாற்பது நாடுகளின் தலைவர்களும் பிரதிநிதிகளும் அம்மகாநாட்டில் பங்குபற்றுவார்களென்று தெரிவிக்கப்பட்டது.

கலாநிதி ஸ்ரீதத் ரம்பால் இந்திய ஜனுதிபதி திரு. ஜியானி ஸெயில்சிங், பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி, வெளிவிவகார அமைச்சர் திரு. நரசிம்மராவ் ஆகியோரையும் சந்தித்தார். அவர்களுடன் பொதுநலவாய மகாநாடு குறித்தும், அதற்கான ஏற்பாடுகள் குறித்தும் அவர் உரையாடினுர். மகாநாடு நடைபெறவுள்ள புதுடில்லியிலிருக்கும் பிரதான மகாநாட்டு மண்டபமான விஞ்யன் பவனையும் அவர் சென்று பார்வையிட்டார்.

கலாநிதி ரம்பால், பாகிஸ்தான் பொதுநலவாய அமைப்பில் அங்கம்பெறுவது குறித்து கருத்து வெளியிடுகையில், இதுவரை அந்த நாடு பொதுநலவாய அங்கத்துவத்துக்காக விண்ணப்பிக்கவில்லையென்று தெரிவித்தார். (கி)

## மாவிட்டபுரம் ஆலயத்தில் முதலுதவி வசதி

(பண்டத்தரிப்பு)

வரலாற்றுப்பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம்ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இன்றுவெள்ளிக்கிழமை கொடி

(6-ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

''யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தரவாரா''

— கணியன் பூங்குன்றனார்

# நமது நோக்கு

## 'பதநீர்' பருகுவோம்!

''குடிச்சுப் பழகணும்'' என்று கலைவாணர் பாட, ''அய்யையோ இது என்ன குடிச்சுப்பழகணும்னு சொல்றீங்களே!'' என்று மதுரம் அங்கலாய்க்க ''ஆமாம், இந்தக்குடியை மறக்கணும்னு நாம் எல்லாரும் ஒற்றுமையா குடிச்சுப் பழகணும்- காலையில் பல் தேய்த்தவுடன் கண்டிப்பாக நீராகாரம் குடிச்சுப் பழகணும்'' என்று தொடர்ந்து பாடி குடியைக் கெடுக்கும் குடியினை மறப்பதற்கு வழி சொன்னார் கலைவாணர் அமரர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள். மகாத்மா காந்தியின் மதுவிலக்குக் கொள்கைக்கு செயல் அளவில் உருக்கொடுக்க, தமிழக அரசின் அப்போதைய முதலமைச்சர் ராஜாஜி அவர்கள் முயன்று கொண்டிருந்த வேளையில் என். எஸ். கே. யின் மேற்படி மதுவிலக்குப் பிரசாரப்பாடல் பெரிதும் உதவி புரிந்தது.

அமரர் சி. என். அண்ணாதுரையால் எழுதப்பெற்று கலைவாணர் தயாரிப்பாக வெளிவந்த 'நல்லதம்பி' திரைப்படத்தில் மதுவிலக்கை வலியுறுத்துவதற்கென்றே 'இந்திரதர்பார்' நாடகம் மிகப்பொருத்தமாகப் புகுத்தப்பட்டிருந்தது. அப்படத்தின் மூலம் என். எஸ். கே. யின் புகழ் பரவியது ஒரு புறமிருக்க, தமிழக அரசின் மதுவிலக்குக்கொள்கைக்கு சாதாரண மக்கள் மத்தியில் ஆதரவு பெருகியது. அறிஞர் அண்ணா தமிழகத்தின் 'பெர்னாட்ஷா' என 'கல்கி' போன்ற மேதைகளால் பாராட்டப்பட்டார்.

ஆனால் நடந்ததென்ன?

ராஜாஜி, காமராஜர், அண்ணா, கலைவாணர் போன்ற சிரேஷ்டத் தலைவர்களால் வலியுறுத்தப்பெற்ற மதுவிலக்கு தமிழகத்தில் இன்று தளர்த்தப்பட்டு மீண்டும் ''பழைய குருடி'' கதையாகியுள்ளது.

இங்கே உள்ள நாம் மாத்திரமென்ன! கலைவாணரின் நகைச்சுவையை இரசித்தோம், அண்ணாவின் அறிவை மெச்சினோம், அத்துடன் சரி—குடியை மறப்பதற்கோ, அதற்கு மாற்றுமருந்தொன்றை - கலைவாணர் கூறியதுபோல - கைக்கொள்ளவோ மறந்து போனோம்.

இப்பொழுது இன்னொரு குரல்,

தென்னிந்தியாவிலிருந்து இங்கே வந்து குரல் கொடுப்பவர் நகைச்சுவையாளர் அல்ல, ஐ. நா. உணவு விவசாயக் கழகத்தின் ஆதரவில் வந்துள்ள இவர், ஒரு நிபுணர். பனம் பொருள்கள் பற்றித் துறைபோக ஆராய்ந்தவர் கலாநிதி சம்பந்தன் அவர்கள்.

இவர் கூறுகிறார் — பனங்கள்ளை உற்பத்திசெய்வதை விட அதற்குப் பயன்படும் 'பதநீரை' பக்குவமாக இறக்கிக் குடிப்பதனால் பன்மடங்கு பயன் பெறலாம் என்பதாகுக !

'பதநீர்' நம்மவர் அறியாததொன்றல்ல. அதன் உருசி, மணம், அதிலுள்ள ஊட்டப் பொருள் பற்றியெல்லாம் நன்குஅறிந்திருந்தும் வெறியூட்டும் கள்தரும் கணப்பொழுது இன்பத்திலும், கிடைக்கும் வருமானத்திலும் மயங்கி தேவாமிர்தமாம் பதநீரைப் புறக்கணித்து வருகின்றோம்.

பதநீரின் குணங்கள் பற்றிக் கூறுகையில் கலாநிதி சம்பந்தன் குறிப்பிடுகிறார்: ''பதநீர் விஞ்ஞான ரீதியில் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. பாடசாலைப் பிள்ளைகள் ஆறு மாத காலம் பதநீரைத் தொடர்ந்து அருந்தி வந்தால் எடை கூடுகிறது, உயரம் அதிகரிக்கிறது. வாய்ப்புண் மாறுகிறது. கண் வியாதி குறைகின்றது, அவர்களின் முகத்தில் பிரகாசம் தென்படுகின்றது. இவைபற்றி ஆராய்ந்து கூறிய தமிழக நிபுணருக்கு பூனா பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது'' என்று

இவ்வளவு சிறப்புக்குணங்களும், மருந்துத் தன்மையும் கொண்ட பதநீர்சாதாரணமாக எல்லா இடங்களிலும் இங்கே கிடைக்கக் கூடியதாய் இருக்க அதனை அதிக அளவில் உற்பத்தி செய்யவும், சகலரும் விரும்பிக் குடிக்கச் செய்யவும் வழி வகை செய்ய வேண்டாமா? பதநீர்பெருமளவில் அருந்தப்படும் நிலை உருவானால் வருமானத்துக்காக கள் உற்பத்தி செய்பவர்களும் கூட பதநீரையே அதிகம் உற்பத்தி செய்ய முன் வருவார்கள். இதனால் தொழிலாளரின் வருமானமும் அதிகரிக்கும்.

அது மாத்திரமல்ல, காலப்போக்கில் கள் அருந்துகிறவர்களின் தொகையும்குறையும். உரிய முறையில் பிரசாரம் செய்யப்பட்டால் பதநீர் அருந்துவதற்காக உல்லாசப் பயணிகளும் பறந்து வரலாம்.

பனம் பொருள் அபிவிருத்திச் சபையினர் ஆலோசகர் கலாநிதி சம்பந்தன் இங்கு இருக்கும் காலத்திலேயே அவரது ஆலோசனைகளைப் பெற்று பதநீர் பதப்படுத்துவதுபோன்ற பணிகளை நிறைவேற்றுவது எதிர்காலத்துக்குப் பயனளிப்பதாய் இருக்கும்.

இந்நிபுணரின் ஆலோசனைகள் எந்த அளவுக்குப் பயன்படுத்தப்படுகின்றன வென்பது அவை செயல் உருப்பெறும் போதுதான் தெரிய வரும்.

## நூல் நிலையக் கட்டிடம்

(மாவிட்டபுரம்)

கொல்லங்கலட்டி சைவத் தமிழ் கலவன் பாடசாலையில் மாணவர்களுக்கென நூல்நிலையக் கட்டிடம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

பாடசாலை அபிவிருத்திச்சங்க ஆதரவில் அமரர் எஸ்.செல்வநாயகம் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட இக்கட்டிடத்தை மாவை ஆலய ஆதீனகர்த்தர் மகாராஜ ஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள் திறந்து வைத்தார்.

பாடசாலை அதிபர் திரு மு. நடராசா தலைமையில் இவ்வைபவம் இடம் பெற்றது.

இக்கட்டிடத்தை திரு செல்லப்பா இராஜரத்தினம் சகோதரர்கள் நிதியுதவி செய்து அமைத்துள்ளனர்.

# இறை அனுபவத்தை உதவும் ஆனி உத்தரம்

### தி. பொன்னம்பலவாணர்

தீபாவளியோ தைப் பொங்கலோ வந்தால் நாம் சமுதாயம் முழுவதும் குதூகலிப்பதுபோல சைவசமயத்தின் கடவுளான சிவபெருமானின் சிறப்பு வடிவமான நடராசப் பெருமானுக்கும் சிறப்புத்தலமான சிதம்பரத் தலத்துக்கும்சிறப்புநாள் சைவமக்கள் அனைவருக்குமே சிறப்பு நாளாகும்.

சந்திரசேகரர்-பிட்சாடனர், அர்த்தநாரீஸ்வரர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், உமாமகேஸ்வரர் முதலிய சிவமூர்த்தங்களில் நடராச மூர்த்திக்கு பல வகையான முதன்மைகள் உண்டு! சிவத்தலங்களில் முதன்மை பெற்ற சிதம்பரத்தின் பிரதான மூர்த்தியாகிய நடராச மூர்த்திக்கு ஒரு வருடத்தில் 6 அபிஷேகங்களே நியமமாக உள்ளன. அவற்றுள் ஆனிஉத்திர தினமும் ஒன்றாகும்.

நடராசமூர்த்தியிடம் ஈடுபாடும் பக்தியும் உடையவர்கள் தாம் வழிபடும் மூர்த்தி விநாயகராக இருந்தாலும் அம்பாளாக இருந்தாலும் அம்மூர்த்திக்கு அபிஷேகம், திருவிழா முதலிய விசேட வழிபாடுகளைச் செய்வது வழக்கமாகவுள்ளது.

திருஞானசம்பந்தர் நடராசப்பெருமானைக் குறிப்பிடும்போது ''ஏறுதோல்புகழ் ஏந்து சிற்றம்பலத்து ஈசன்'' என்று பாடியுள்ளார். வேதாமாதி சாத்திரங்களிலும் திருமுறை முதலிய பக்தானுபவங்களிலும் மட்டுமன்றி இன்றைய கலாசனைக்கு உரியவராகவும் நடராசப்பெருமான் விளங்குவது ஒரு வகையில் பெருமைக்குஉரியதேயாகும்.

மண், பொன், பெண் என்று மூன்றுவிதமான ஆசைகளால் மனிதன் இறைவழியில் நடக்க முடியாமலுள்ளான் என்பது அரிய கண்டுபிடிப்பாகும். இந்த மூன்றுக்கும் புறம்பாக சமணமதத்தாக்கத்தால் தன் பிறவியின் பெரும் பகுதியைத் தர்க்க குதர்க்க வாதங்களால் நட்டப்படுத்தி, அதற்காக வேதனைப்பட்டவருமான திருநாவுக்கரசர் சிதம்பர நடராசரைத் தரிசித்ததும் ''மனிதப்பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே'' என்றாரென்றால் நடராச தரிசனத்தின் பெருமையும் நடராச தரிசனத்தால் உண்டாகும் மகிழ்ச்சியும் எத்தகையது என்பதை ஊகிக்கலாம்.

பல வருடங்கள் தொடர்ந்து படிப்பவன் ஒரு பட்டத்தையும் விவசாயத்திலோ, வியாபாரத்திலோ ஊக்கமுடன் ஈடுபடுபவன் தன் முயற்சிக்குரிய பயனையும் அடைதல் போன்று இறை வழிபாட்டிலும், ஆத்ம வளர்ச்சியிலும் ஆர்வமும் ஊக்கமும் உடையவன் தெய்வீக இன்பத்தையோ தெய்வீக இன்பத்தின் ஒரு பகுதியையோ அடைவது மிக நிச்சயம்,

தெய்வீக இன்பத்துக்கு உரிய தகுதியையும் வழிவகைகளையும் உதவும் புண்ணிய காலங்களையும், புண்ணிய காலங்களில் செய்யத்தக்க வழிபாட்டையும் பேணிக் கொள்ளுதல் மனிதர் கடனாகும்.

சிதம்பரத்திலும், இதயத் தாமரையிலும் நடராசப்பெருமானைத் தரிசிக்க உபகாரமான புண்ணிய தினங்களில் ஆனி உத்தரமும் ஒன்றாகும்.

பெருந்தொகை பணத்தைப் பரிசாகப் பெறுபவன் தான் விரும்பியதை அப்பணத்தால் அடைதல் போன்று நடராசப்பெருமானின் பெருங்கருணையை பெறுவதில் முயலுபவன் சிவனருளால் தன் சகல தேவைகளையும் நிறைவேற்றுதல் எளிதினும் எளிது.

# மாவை முருகன் வரலாற்றுப்பெருமை

[இன்று மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில் கொடியேற்றம்]

### த. சண்முகசுந்தரம்

ஈழம் சிவபூமி என்பர் ஆன்றோர். இங்கு தொன்றுதொட்டு முருகவழிபாடு நிலவி வருகின்றது. முருகப்பெருமானுக்குச் சிறிதும் பெரிதுமாக ஈழத்தின் பலபாகங்களிலும் திருக்கோயில்கள் இருக்கின்றன இத்திருக்கோயில்கள் யாவும் சைவப் பொலிவுடன் திகழ்கின்றன. ஈழத்து முருகப்பெருமானின் ஆலயங்களில் மிகவும் முக்கியயமானவற்றுள் ஒன்றாக அமைந்திருப்பது மாவிட்டபுரம் முருகன் திருக்கோயில். மிகவும் பழமைவாய்ந்த இந்தக்கோயிலின் வரலாறு பெருமைவாய்ந்தது; சிறப்பு வாய்ந்தது; புகழ்வாய்ந்தது.

மாவிட்டபுரம் முருகன் திருக்கோயில் வரலாற்றை ஆய்விற்காக மூன்று கட்டங்களாகப் பிரித்துப் பார்க்கலாம். முதலாவது கட்டம் தோற்றக் காலம். இரண்டாவது கட்டம் யாழ்ப்பாணத்தை 1616 இல் போர்த்துக்கேயர் கைப்பற்றியபோது அழித்ததுடன் முடிவடைகின்றது. மூன்றாவது கட்டம் இக்கோயில் 1782 ஆம் ஆண்டுவரை மறுசீரமைக்கப் பெற்றதுடன் தொடங்குகின்றது. இந்த மூன்று காலகட்டங்களையும் விரித்து ஆராய்ந்தால் இக்கோயிலின் வரலாறு ஒருவாறு முழுமையாக அமைந்து விடும் எனலாம். எனினும் இக்கோயில் பற்றி மேலும் ஆராய வேண்டியவை பலவுண்டு.

முருகப்பெருமான் சிவன் மைந்தன். அவனே தமிழ்க் கடவுள்; செவ்வேள்; செம்பொருள்; பரம்பொருள்; அழகன். தமிழ் மக்கள் கடல்கடந்து சென்று வாழ்ந்தாலும் அழகிய வேலவனை ஒருபோதும்மறந்ததில்லை. வாழ்கின்ற இடமெல்லாம் முருகப் பெருமானுக்குக் கோயில் எழுப்பி வாழ்கின்றனர். முருகவழிபாடு, சைவ வரலாற்றில், தமிழர் சால்பில், தனிஇடம் பெறுகின்றது. இத்தனித்தன்மை சைவத்தின் துடிப்பாக, மூச்சாக அமைந்துள்ளமை பெருமைக்குரிய அலுவல்.

முதலில் மாவை முருகன் திருக்கோயில் தோற்றிய வரலாற்றைச் சுருக்கமாகச் கவனிக்கலாம். இவ்வரலாறு படிப்போரை மெய்சிலிர்க்கும்வகையில் அமைந்துள்ளது. வரலாற்று அடிப்படையில் நோக்குமிடத்து இக்கோயில் தோன்றிய காலம் கிட்டத்தட்டத் தமிழ் நாட்டுப் பல்லவர் காலம் என்பர் ஒருசாரார். அதாவது 7ம் நூற்றாண்டு பேராசிரியர் கணபதிப்பிள்ளை, இக்கோயிலைச் சமைத்த மாருதப்பிரவல்லியின் காலம் கிட்டத்தட்ட கி. பி. 9ம் நூற்றாண்டு என்பர். வேறு ஒருசாரார் இதன்காலம் 10ம் நூற்றாண்டு என்பர். எது எவ்வாறிருப்பினும் மாவை முருகனின் கோயில் வரலாறு தனிப்பெருமை வாய்ந்தது.

'யாழ்ப்பாண வைபவமாலை' போன்றநூல்களின்படி இக்கோயிலின் வரலாறுமேல் வருவருமாறு:- திசையுக்கிர சோழனின் மகள் மாருதப்பிரவல்லி. இப் பேரழகியைக் குன்மநோய் பீடித்தது. அழகு குன்றியது; மெலிவுமேலிட்டது; முகம் குதிரைமுகம் போல மாறியது. வைத்திய பண்டிதர்கள் எவராலும் இந்த நோயைத் தீர்க்க முடியவில்லை. இந்த மங்கை நல்லாள் தலயாத்திரை செய்து புண்ணிய நீராடப் புறப்பட்டாள். இவரைச் சாந்தலிங்கன் என்னும் துறவி கண்டார். இவரின் பணிப்பின்படி மாருதப்பிரவல்லி கீரிமலையிலுள்ள தீர்த்த மாடத் தமிழ்த் திருநாட்டிலிருந்து ஈழநாடு வந்து சேர்ந்தார். கீரிமலைக்குச் சென்று தவத்திரு நகுலமுனிவரைக் கண்டு அவரின் அருள்மிகு ஆசியைப் பெற்றார். அவரின் அருள் ஆணைப்படி கீரிமலையில் புனிதநீராடி நோய்நீங்கப்பெற்றார். குன்மநோய் பறந்தது; குதிரைமுகம் திருவருளால் மாறியது. எனவே வல்லியார் அழகுடன் அருளையும் பெற்றார். அன்று தொடக்கம் கோயிற்கடவை என்ற பழைய பெயர்மாறியது. மாவிட்டபுரம் என்ற பெயர் நிலைத்தது. அதாவது குதிரைமுகம் நீங்கிய இடம் என்பது இதன் பொருள். அருள் மேலிட்ட அம்மையார் மாவிட்டபுரத்தில் முருகனுக்குக் கோயில் அமைத்தார். இதற்குவேண்டிய ஒழுங்குகள் யாவற்றையும் நற்செய்தி கேட்ட தந்தை திசையுக்கிர சோழன் செய்வித்தார். இக்கோயிலின் பெருவிழா ஆனி உத்தரநாளில் நடந்தேறியது. முருகப்பெருமானின் திருவுருவச்சிலையையும் ஏனைய கோயிற்பொருட்களையும் கொண்டு முப்போதும் திருமேனிதொடும் பெரும்பேறு பெற்ற தில்லை மூவாயிரருள் ஒருவரான அந்தணர் பெருமகன பெரிய மனத்துள்ளார் இன்றைய காங்கேசன்துறையில் வந்து இறங்கினார். காங்கேயன் திருவுருவம் வந்திறங்கிய படியால் இத்துறைமுகம் காங்கேசன்துறை என்ற பெயரைப் பெற்றது என்கிறது யாழ்ப்பாணவைபவமாலை. பெரியமனத்துள்ளார சிதம்பரம் மஞ்ச குப்பத்தைச் சேர்ந்தவர் என்பது செவிவழி வந்த கதை. இவரின் வழித்தோன்றல்களே இன்றைவரையும் இக்கோயிலைச் சைவமரபு குன்றாமல் நடத்தி வருகின்றனர் என்பர் ஆய்வாளர். இக்காரணத்தினால் இக்கோயில் நித்திய நைமித்திய முறைகள் யாவும் தனித்தன்மை வாய்ந்தவை என்று முருகனடியார்கள் இன்றும் பெருமை கொள்வர். மாருதப்பிரவல்லி அம்மையார் ஈழத்து யாழ்ப்பாணத்தை ஆண்ட உக்கிரசிங்க அரசனைத் திருமணஞ் செய்து தமிழ் நாட்டிற்கும் ஈழவள நாட்டிற்கும் உரிய தொடர்பை

[8-ம் பக்கம் பார்க்க

# பாடசாலை பிள்ளைகளுக்கு பதநீர் சிறந்தபானம்

## பனம்பொருள் நிபுணர் கூறுகிறுர்

(புலோலி நிருபர் ஏ. என். எஸ். திருச்செல்வம்)

இலங்கை வந்து பனம் பொருள் அபிவிருத்திச் சபையில் விசேட பனை அபிவிருத்தி ஆலோசகராாய் பதவியேற்றுள்ள யுனெஸ்கோ பனந் தொழில்நிபுணர் திரு. கே. சம்பந்தம் பனையிலிருந்து பெறப்படும் 'பதநீர்' பற்றித் தெரிவித்த கருத்துக்கள் இங்கு தொகுத்தளிக்கப்படுகின்றன.]

பதநீரை அமிர்தம் என்று பழங்கால ஏடுகள் தெரிவிக்கின்றன. அமிர்தம் என்றுல் மரணத்தைத்தடுத்து நீண்ட ஆயுளைத் தரக்கூடியதென்பது பொருளாகும். இன்றுஇந்தியாவில் கிராமங்களில்மட்டும் அல்லாது பெரிய நகரங்களிலும் பதநீர் குளிர்விக்கப்பட்டு நாகரீகமாக போத்தல்களில் அடைக்கப்பட்டு உறிஞ்சும் குழாய்மூலம்பருக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பதநீர் அருந்தும் குழந்தைகளின் முகத்தில் 'தேஜஸ்' ஏற்படுகின்றதென்பதைக் கண்டுபிடித்த நிபுணருக்கு பூனு பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது. இவ்வாறு அமிர்தனெக் கருதப்படும் பதநீரை யாழ்ப்பாணப் பகுதி மக்கள் அதிகமாகப் பருகுவதில்லை. இதற்கான காரணம் தெரியவில்லை.

இந்தியா முழுவதும் பதநீரை அரசர்களும் அருந்தினர். அதனுல்தான் பதிநீர் என்று பெயர் வந்தது. பதி என்றுல் அரசன். நீர் என்றுல் பானம். பதநீரை அமிர்தம் என்று பழங்கால ஏடுகள் பகர்கின்றன 'மிர்த்' என்றுல் மரணம். 'அமிர்த்' என்றுல் மரணத்தைத் தடுக்கும் என்று பொருள்.

மரணத்தைத் தடுப்பது என்றுல் நீண்ட ஆயுளைத்தரும் என்பது கருத்து அப்படிப் பதநீரில் உயிர்ச் சத்துக்கள் என்ன இருக்கின்றன. உயிர்ச்சத்து 'பி' கொம்பிளெக்ஸ் உள்ளது. இது இரத்த விருத்தியைச் செய்கின்றது. தையோறின் என்ற ஊட்டச்சத்து இரத்த அணுக்களை வலுப்படுத்துகின்றது. இதில்உள்ள சீனிச்சத்து உடலுக்குத் தேவையான எரிபொருட் சக்தியைத்தருகிறது. விற்றமின் 'சீ' இருக்கிறது. இது பற்கள் எலும்பு, நகங்களை உறுதிப்படுத்திக் கொண்டே வருகிறது. பாஸ்பரஸ் மனிதனின் மூளையை வலுவடையச் செய்கின்றது. உடலைக் குளிர்ச்சி அடையச் செய்யவேண்டிய, இருமல் வராமல் தடுக்கவேண்டிய சக்திகள் எல்லாம் பதநீரில் நிறைந்துஉள்ளன.

பதநீரில்உள்ள ஊட்டச்சத்தையும், உயிர்ச்சத்தையும் கேள்விப்பட்ட மகாத்மா காந்திஜி தன்னுடைய ஆச்சிரமத்தில் பதநீரை இறக்கச் செய்து, தினமும் காலையில் ஒரு கிண்ணம் பதநீரை எல்லோரும் குடிக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தினுர். நாடு சுதந்திரம் அடைந்தவுடன் இந்தியத் தலைவர்கள் பதநீர் உற்பத்தியை விரிவுபடுத்தவேண்டும் என்றும், பனைத்தொழிலை மத்திய அரசு ஒரு இலாக்காவில் சேர்க்க வேண்டும் என்றும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

1947ம் ஆண்டு டிசம்பர் மாதம் பனைத்தொழில் இந்திய மத்திய அரசில் உணவு இலாக்காவில் சேர்க்கப்பட்டது. இன்று இந்தியா முழுவதும் எல்லாத் தரத்தினரும் நாகரீகமாகப் பதநீர் அருந்துகின்றனர். நீர்போல இருப்பதால் இதற்கு நீரா என்றுபெயரிட்டனர். பனை மரங்களுக்கு அரசு திர்வை போடவோ, அல்லது பனையிலிருந்து கிடைக்கும் பனைப்பொருள்களுக்கு விற்பனை வரி போன்ற வரிகள் போடவோகூடாதென்றும் வற்புறுத்தப்பட்டது.

இன்று இந்தியாவில்கிராமங்களில் மட்டுமல்லாது பெரிய நகரங்களிலும் பதநீர் குளிர்விக்கப்பட்டு நாகரீகமான போத்தல்களில் அடைக்கப்பட்டு உறிஞ்சும் குழல் மூலம் பருக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பதநீர்க்கடைகளை நடாத்துவதற்கான லொறிகள், வாகனங்கள், குளிரூட்டும்சாதனங்களை அரசாங்கம் இலவசமாகவும், பின்னர் பாதிவிலையிலும் வழங்குகின்றது.

யாழ்ப்பாணத்தில் பதநீர் அதிகமாகப் பருகப்படவில்லை. இதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. இங்கு உள்ள பனைமரங்கள் அருமையான பதநீரைச்சுரக்கின்றன. அத்துடன் இனிப்புச்சத்தும் அதிகமாகவே இருக்கிறது. பதநீருக்கு உள்ள நறுமணமும் உண்டு.

பதநீர் இந்தியாவில் விஞ்ஞானரீதியில் பரிசிலனை செய்யப்பட்டுஉள்ளது. பாடசாலைப் பிள்ளைகள் ஆறுமாதகாலம் பதநீரைத் தொடர்ந்து அருந்தி வந்தால் அவர்களின் எடை கூடுகின்றது. உயரமும்அதிகரிக்கிறது. வாய்ப்புண்கள் மாறுகின்றன. கண் வியாதிகள் குறைகின்றன. பதநீர் அருந்தும் குழந்தைகளின் முகத்தில் 'தேஜஸ்' ஏற்படுகிறது என்று பூனுவிலுள்ள நிபுணர் ஒருவர் கண்டுபிடித்தார். அவருக்குப் பூனு பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

மதுரையிலுள்ள உலகப் புகழ்பெற்ற கண்டாக்டர் ஜீ. வெங்கடசாமி அரசாங்க ஆஸ்பத்திரியில் மருந்து மாதிரி விநியோகம் செய்து கண்வியாதிகளைப் பதநீர் எவ்வாறு குணப்படுத்துகின்றது என்று கண்டுபிடித்தார். அகில இந்திய கண்குருடு தடுப்பு மகாநாட்டில் கலந்துகொண்டவிஞ்ஞானிகள் இதனை ஏற்றுக்கொண்டு பாடசாலைப் பிள்ளைகளுக்குப் பதநீர் கொடுப்பதற்குச் சிபார்சு செய்துள்ளனர்.

பதநீரின் மகத்துவத்தை அறிந்த இந்திய அரசு பம்பாயிலுள்ள மக்களுக்கு பதநீரை நூறுமைல் தொலைவிலுள்ள பூனுவிலிருந்து கொண்டு வருவதற்குக் குளிரூட்டும் வாகனங்களை வாங்கித் தந்திருக்கிறது. பம்பாயிலுள்ள மக்கள் காலையில் பதநீரை விரும்பிக் குடிக்கின்ருர்கள். கடந்த ஆண்டு பம்பாயில் மட்டும் பதநீர் ஐம்பதுலட்சம் ரூபாவிற்கு விற்பனையாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நாகரீகமான முறையில் பதநீரை விற்பனை செய்வதற்குப் பனை அபிவிருத்திச்சபை ஏற்பாடு செய்கிறது. முக்கியமான இடங்களில் பதநீர் விற்பனை நிலையங்கள் திறக்கப்பட இருக்கின்றன.

## 150 ஆண்டுகள் சிறப்பாக இயங்கும் புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலை

(புலோலி)

''புலோலிமெதடிஸ்தமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை வெகு விரைவில் மகாவித்தியாலயமாகத் தரமுயரவுள்ளது. இப்பாடசாலையை மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்துவதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் சகல நடவடிக்கைக்கும் நான் என்னுலான ஒத்துழைப்பையும் உதவிகளையும் வழங்குவேன்''

இவ்வாறு புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் 150வது ஆண்டு நிறைவு விழாவிலும் கலைவிழாவிலும் பரிசளிப்பு வைபவத்திலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு எம். சிமியாம்பிள்ளை குறிப்பிட்டார். பாடசாலை அதிபர் திரு. கே. கணபதிப்பிள்ளை (சுகுணு) தலைமையில் நடைபெற்ற இவ் விழாவிலே தொடர்ந்து உரையாற்றிய திரு சிமியாம்பிள்ளை குறிப்பிட்டதாவது:

ஒரு பாடசாலை 150 ஆண்டுகள் சிறப்பாக இயங்கி ஒரு சமூகத்திற்குச் சேவை செய்வது கல்வி உலகில் மகத்தான சாதனையாகும். இவ்வாறு 150வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இப் பாடசாலையின் விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வதற்கு எனக்குக் கிடைத்தது பெரும் பாக்கியமாகும். இதர பாடசாலைகளுக்கு இப் பாடசாலை முன் மாதிரியாகத் திகழ வேண்டும்.

இதுபோன்ற 150வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் பாடசாலையின் விழாவில் கலந்துகொள்ள எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இவ்விழாவிலே கலந்துகொள்வது எனக்குப் பெருமையையளிக்கின்றது. இப்பாடசாலை 150 வருடங்களாகச் சிறப்பான கல்விப் பணியை மேற்கொண்டுவருவது சமுதாயத்திற்கு அதுவழங்கும் சிறந்த பணியைக் காட்டுகின்றது. இப்பாடசாலை பல அறிஞர்கள், பெரியோர்களை உருவாக்கியுள்ளதை அறியும் போது மகிழ்ச்சியடையாமலிருக்க முடியாது.

இங்கு கல்வி கற்பித்துவரும் அதிபர்கள், ஆசிரியர்களின் சிறந்த ஒழுக்கமும், கடமையுணர்வும், தியாக மனப்பான்மையுமே இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு வழிவகுத்து வருகின்றது. நான் இம்மாவட்டத்தில் பதவியேற்ற ஆரம்பத்தில் இங்கு கட்டிடமொன்றை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டிவைத்தேன். அக்கட்டிடம் விரைவில் பூர்த்தியடைந்துவிட்டது. இவ்வருட முடிவிற்குள் அக்கட்டிடத்தின் மேல் 2 இலட்ச ரூபாய் செலவில் மாடிக் கட்டிடமொன்றும் அமைக்கப்பட்டுப் பூர்த்தியாகிவிடும். இப்பாடசாலையை மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கு என்னுலான சகல உதவிகளையும் வழங்குவேன். வெகு விரைவில் இப்பாடசாலை மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்தப்படும்.

பருத்தித்துறை வட்டாரக் கல்வியதிகாரி திரு. பீ. சச்சிதானந்தம் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

''ஆலயங்களும், பாடசாலைகளும் சிறப்பாக இயங்கும் போதுதான் அக்கிராமத்திற்குப் பெருமையும், உயர்ச்சியும் ஏற்படமுடியும். இதனுல்தான் கிராமிய மக்களின் வாழ்க்கை சிறப்படைந்து வாழ்வில் ஒளி வீசும். எனவே, ஆலயங்களையும், பாடசாலைகளையும் சிறப்பாக இயங்கச்செய்வதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளவேண்டும்.

''பாடசாலைகளில் இது போன்ற விழாக்கள் கொண்டாடப்படவேண்டியது மிகமுக்கியமாகும். அப்போதுதான் பாடசாலைகள் வழங்கும் சிறந்த சேவைகளையும் அதன் பெருமைகளையும், வளர்ச்சியையும் எல்லோரும் அறிந்து கொள்ள வழியேற்படும், இப்பாடசாலையை ஸ்தாபித்த மெதடிஸ்த மிஷனரிமாருக்கும், காணியை வழங்கிய பெரியோருக்கும் நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும், இப்பாடசாலையில் விளையாட்டுப்போட்டி நடாத்தப்படாமலிருப்பது ஒரு பெருங் குறைபாடாகும். எனவே விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்:

யாழ். விஞ்ஞானக் கல்வியதிகாரி திரு. கே. செல்லத்துரை உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது: 1833-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை சிறப்பாக இயங்கி வருவது இப்பகுதி மக்களுக் கிடைத்த வரப்பிரசாதமாகும் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றேர்கள் ஆகியோர் ஒருங்கிணைந்து செயற்படும்போது தான் பாடசாலையின் கல்வித் தரத்தை மேம்படுத்த முடிவதுடன்மாணவர்களின் எதிர்கால வாழ்க்கையை வளமுடையதாக்கவும் முடியும். மாணவர்கள் கல்வி கற்பதற்கு உரிய ஆவலை ஆசிரியர்கள் ஏற்படுத்த வேண்டும். மாணவர்கள் ஆவலுடன் கல்வி கற்கவேண்டும். மாணவர்கள் சிறந்த கல்வியறிவைப்பெற்று நல்லொழுக்கத்துடனும், கடமை, கண்ணியம் கட்டுப்பாடுகளுடனும் நற்பிரஜைகளாக வாழவேண்டும்.

யாழ்ப்பாண விவசாயக் கல்வியதிகாரி செல்வி ரி. பெரியதம்பி, உடுப்பிட்டி வட்டாரக் கல்வியதிகாரி திரு வீ. கே, ஈசுரபாதம், புலோலி தெற்கு கிராமோதய சபைத் தலைவர் திரு கே. வீணுகோபால் (அதிபர்) புலோலி வேலாயுதம் ஆண்கள் மகாவித்தியாலய அதிபர் திரு வீ. சே. ஏகாம்பரநாதன் உட்பட இன்னும் பலர் உரையாற்றினுர்கள்.

திருமதி ஜெயமணி சிமியாம்பிள்ளை பரிசில்களை வழங்கினுர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# "வாடிக்கு நெருப்புவைக்கப்பட்டது! முதியவரும் எரியுண்டு போனுர்!"

## ஆலங்கேணி மரணவிசாரணையில் சாட்சியம்

(திருகோணமலை)

'அறுபத்தொரு வயது முதியவரைக் கடுமையாகத் தாக்கி விட்டுப் பின்னர் அவருடன் சேர்ந்து அவர் இருந்த காவல் வாடிக்கும் நெருப்பு வைக்கப்பட்டது, இதனுல் அவர் எரியுண்டு போனுர்.

ஆலங்கேணி கிராமத்தைச் சேர்ந்த சோமநாதன் அம்பிகைபாகு என்பவரின் மரணம் தொடர்பாக இடம்பெற்ற மாண விசாரணையில் மேற்காணும் தகவல் வெளியானது பதில் நீதிபதி திரு. மு. சோ. செல்வராசா நடாத்திய மரண விசாரணையில் சாட்சியம் அளித்த இறந்தவரின் இருபத்தொரு வயது மகன் அமிர்தலிங்கம் பின்வருமாறு கூறினுர்:

இம்மாதம் 8-ம் திகதி இரவு ஏழுமணியளவில் எனது தந்தையான காலஞ்சென்றவரை வயலில் உள்ள அவரது வாடியில் சந்தித்தேன். அவரிடம் இருந்து விடை பெற்றுக் கொண்டு 600 யார் தொலைவில் உள்ள எனது வீட்டுக்குச் சென்றேன். உணவருந்தியதும் தூங்கச் சென்றேன். திடீரென பெரும் இரைச்சல் சேட்டு விழித்துப் பார்த்தேன். தந்தையாரின் வாடியில் நெருப்பு எரிவதைக் கண்டேன். அங்கு விரைந்து சென்றேன்.

தகப்பனுரின் வாடி முற்றுக எரிந்து விட்டது. தகப்பனுர் எரிந்த நிலையில் காணப்பட்டார். அவரைத்தூக்கி வளர்த்தினேன். தண்ணீர் தெளித்தேன். அவர் இறந்து கிடக்கக் காணப்பட்டார். அவருடைய உடலில் மூன்று காயங்கள் காணப்பட்டன. இரண்டு வெட்டுக் காயங்கள், ஒன்று குத்துக் காயம்.

அடுத்து காலஞ்சென்றவரின் இளைய மகன் பிரபாகரன் சாட்சியம் அளித்தார். அவர் தனது சாட்சியத்தில் கூறியதாவது:

'எனது வயல் தந்தையின் வயலுக்குகாமையில் காணப்படுகிறது, என்னுடைய வாடி தகப்பனுரின் வாடியில் இருந்து 250 யார் தொலைவில் உண்டு, சம்பவதினம் தகப்பனுரின் வாடிக்குச் சென்றேன். அப்போது தகப்பனுர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவரிடம் தம்பியார். அமிர்தலிங்கத்தின் லைசென்ஸ் உள்ள துவக்கும் இருந்தது. அதன் பின்னர் எனது வாடிக்குச் சென்று விட்டேன். வாடி எரிந்த தகவல் கிடைத்துப் பின்னர் வந்தேன். அங்கு முன்னர் இருந்த துப்பாக்கியைக் காணமுடியவில்லை. திருகோணமலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி, சி. கே: செல்லத்துரையும் சாட்சியம் அளித்தார்.

இம்மரணம் கொலையெனத் தீர்ப்பு வழங்கிய திருகோணமலை பதில் நீதிபதி திரு. மு. கோ. செல்வராசா குற்றவாளிகளைக் கண்டுபிடித்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சீனன்வாடிப் பொலிசாரைப் பணித்தார்.

### நீதியரசர்கள் வீடுகள்முன் ஆர்ப்பாட்டம்:

# திருமலை சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

(திருகோணமலை)

நீதியரசர்களின் இல்லங்களின் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்ட சம்பவங்களைக் கண்டித்து திருகோணமலை சட்டத்தரணிகள் சங்கம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி உள்ளது. திருகோணமலை வழக்கறிஞர் சங்கத் தலைவர் திரு ஓ. எல். எம், இஸ்மாயில் தலைமை வசித்தார்.

இவ்வார்ப்பாட்ட சம்பவம் நீதித்துறையின் சுதந்திரத்துக்குப் பங்கம் விளைவிக்கும் நடவடிக்கை ஆகும். அத்துடன் நாட்டில் சட்ட ஆட்சி, ஜன நாயக ஆட்சி ஆகியவற்றுக்கு ஊறு விளைவிக்கும் என்றும் இத் தீர்மானத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இச்சம்பவங்கள்தொடர்பாக சுதந்திரமான விசாரணைக் குழுவொன்றினை நியமிக்கும்படியும், இச்சங்கம் நிறைவேற்றி உள்ள பிறிதொரு தீர்மானத்தில் கோரப்பட்டு உள்ளது, ஆரோக்கியமான ஜன நாயக மரபுகள் நாட்டில் பேணப்பட வேண்டுமாயின் இத்தகு சம்பவங்கள் மீண்டும் தலைதூக்கா வண்ணம் அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் அவசியம் என்று இத்தீர்மானம் மேலும் குறிப்பிடுகிறது.

"தமிழர் விடுதலைக் கூட்டணி

# தமிழ் ஈழக் கோரிக்கையை கைவிடக்கூடாது"

## த. வி. கூட்டணியின் மயிலிட்டி - தையிட்டிக்கிளை தீர்மானம்

(மாவிட்டபுரம்)

"தமிழர்விடுதலைக்கூட்டணி தமிழ் ஈழக் கோரிக்கையை எத்தகைய சூழ்நிலையிலும் கைவிடக்கூடாது. அதுமட்டுமன்றி போராட்டத்திற்கான சூழ்நிலை சரியில்லையென்று தொடர்ந்தும் கூறிவராமல் உடனடியாக சட்டமறுப்பு போராட்டங்களையாவது ஆரம்பித்து நடத்தவேண்டும்"

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி மயிலிட்டி வடக்கு-தையிட்டி கிளை கூட்டணி மாநில மகாநாட்டில் தீர்மானமொன்றை சமர்ப்பிக்க இருக்கிறது.

மாநில மகாநாட்டுத் தீர்மானங்கள் குறித்து ஆராய்வதற்கென இக்கிளைகூடி பின்வரும் தீர்மானங்களையும் மாநில மகாநாட்டில் சமர்ப்பிப்பதென முடிவுசெய்தது.

0 "ஜனதிபதி கூட்டணி பேச்சுவார்த்தைகளின் பெறுபேறுகளை நோக்கும்போது ஜனதிபதியின் நோக்கம் காலத்தை கடத்துவது என்றே கருதவேண்டியுள்ளது. ஆகவே இப்பேச்சுவார்த்தையில் கூட்டணி இனிமேல் ஈடுபடக் கூடாது.

0 "கடந்த பாராளுமன்ற தேர்தல்களின்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தமது தொழிலை விடுத்து முழுநேர அரசியலில் ஈடுபடவேண்டுமென நிபந்தனை விதிக்கப்பட்டது. ஆனுல் சிலரைத் தவிர ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் பகுதி நேரமாகவே அரசியலில் ஈடுபடுகின்றனர். ஆகவே பாராளுமன்ற உறுப்பினர்களை முழுநேர ஊழியர்களாக செயல்படுமாறும், அவ்வாறு செயல்படத்தவறும் பட்சத்தில் பதவியிலிருந்து விலகுமாறும் கோருதல்.

0 "பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி துறந்தால் புதிய தேர்தலை சந்திக்கும்போது தீவிரமாக செயற்படக்கூடிய மாவை சேனுதிராசா, காசி ஆனந்தன் போன்றேருக்கு இடமளிக்கவேண்டும்.

0 "இன்றைய சூழ்நிலையில் பதவிகளை துறக்காமல் இருப்பது என்றநிலை ஏற்படுமிடத்து தமிழ்ஈழ போராட்டத்தில் முழுமனதோடு ஈடுபடமுடியாதவர்களையும், சக்தியற்றவர்களையும் பதவி துறக்கச்செய்து புதிய முகங்களுக்கு வாய்ப்பளிக்கவேண்டும்.

0 "கூட்டணியிலிருந்து இளைஞர் சக்திகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பிரிந்துவிட்டார்கள். இளைஞர் சக்தி இன்றியமையாததாக விளங்குவதால் இளைஞர் அமைப்பினை வலுவுள்ளதாக ஆக்கவேண்டும்.

0 "அரச வைபவங்களில் எம். பி.க்கள், அபிவிருத்தி சபை, உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் கலந்துகொள்ளக்கூடாதென்ற தீர்மானத்தை கடுமையாக அமுல் நடத்தவேண்டும்.

மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

நல்லூர் உ. அ. அலுவலகம்:

## பாதுகாப்பற்ற இடத்தில் இருப்பதாகப் புகார்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் இயங்குவதற்கான இடம் தேர்ந்தெடுப்பதில் பெருத்த சங்கடம் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆறும் திகதி பகல் ஆறு துப்பாக்கி இளைஞர்களினுல் திருநெல்வேலி சந்தியில் இருந்து சுமார் 50 யார் தூரத்தில் அமைந்திருந்த நல்லூர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் தாக்குதலுக்குள்ளாகி மூடப்பட்டது தெரிந்ததே.

இந்த அலுவலகம் பாதுகாப்பற்ற இடத்திலிருப்பதால் தொடர்ந்து கடமையாற்ற முடியாதிருக்கிறதாக உத்தியோகத்தர்கள் யாழ் அரசாங்க அதிபரிடம் தெரிவித்திருந்தனர். இதனையிட்டு யாழ் அரசாங்க அதிபர் உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் இயங்கக்கூடியதாக புதிதாக ஒன்றைத் தேர்ந்தெடுப்பதில் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நல்லூர் ஆடியபாதம் வீதியிலுள்ள யாழ் மாவட்டசபையின் உப அலுவலகததில் மேற்படி காரியாலயம் இயங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டபோதிலும் அங்கு போதிய இடவசதியில்லாத காரணத்தால் கைவிடப்பட்டுள்ளது.

இப்பொழுது கொக்குவிலிலுள்ள மாவட்டசபை உப அலுவலகத்தில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் அமைப்பதற்கு ஆலோசிக்கப்பட்டுவருவதாகத் தெரிகிறது. (மா)

வலி-வடக்கில்

## மண்ணெய் தட்டுப்பாடு விவசாயிகள் பாதிப்பு!

(மாவிட்டபுரம்)

வலி - வடக்கில் மண்ணெய் தட்டுப்பாட்டால் விவசாயிகள் பெரிதும் கஷ்டமுறுகிறுர்கள்.

வெங்காய செய்கை மேற்கொண்டுள்ள இப்பகுதி விவசாயிகள் அதற்கு நீர் இறைக்க மண்ணெய் இல்லாமையால் மண்ணெய் வாங்குவதற்காக அலைந்து திரிகிறுர்கள்.

மண்ணெய் விநியோகிக்கும் இடங்களில் கட்டுப்பாட்டு முறையிலேயே விநியோகம் இடம் பெறுவதால் நீண்ட கியூவில் மக்கள் காத்து நிற்கிறுர்கள். மண்ணெய் மட்டுமன்றி பெற்ருேல் டீசல் என்பவற்றுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனுல் மீனவர்கள் தொழிலை மேற்கொள்ள முடியாமல் கஷ்டமுறுகின்றனர். மீனுக்குத் தட்டுப்பாடும் விலையேற்றமும் ஏற்பட்டுள்ளது.

பெற்ருேல், டீசல் தட்டுப்பாட்டால் வாகன சொந்தக்காரர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (சூ)

## ஹண்டி இல்லம் சாம்பியன்

(அரியாலை)

யாழ். பரியோவான் கல்லூரியின் இல்லங்களுக்கிடையிலான வருடாந்த மெய்வல்லுநர் போட்டியில் 251 புள்ளிகளைப் பெற்ற ஹண்டி இல்லம் சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்டது.

## சில்லாலையில் புதிய மின் இணைப்புகளை நிறுத்தவும்!

### கி. அ. ச. கூட்டத்தில் தீர்மானம்

(பண்டத்தரிப்பு)

சில்லாலைப் பகுதியில் புதிய மின்மாற்றி (ரான்ஸ் போமர்) சாதனம் நிறுவப்படும்வரை சில்லாலைப் பகுதியில் புதிய மின்சார விநியோகம் எதனையும் மேற்கொள்ளவேண்டாம் என்று யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. சு. நடராசாவை கேட்டுக்கொள்ளும் முக்கிய தீர்மானம் ஒன்று சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்க செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சங்கத் தலைவர் திரு. என். ஜேம்ஸ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சங்கத்தின் செயலாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி இத்தீர்மானத்தை பிரேரித்து உரையாற்றுகையில் "சில்லாலைப் பகுதியிலுள்ள வீடுகளுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கும் மின்சாரம் ஒளிமங்கியநிலையில் இருப்பதால் பாவனையாளர் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் மேலும் புதிய மின் இணைப்புகளை கொடுப்பதன் மூலம் தற்போதையநிலை மேலும் மோசமடையலாம் என்ற காரணத்தினுல் புதிய (ரான்ஸ்போமர்) மின்மாற்றி சாதனம் நிறுவப்படும் வரை புதிய இடங்களுக்கு மின்இணைப்புகள் வழங்குவதை நிறுத்திவைக்க வேண்டும்', என்று குறிப்பிட்டார்.

இத்தீர்மானத்தின் பிரதிகள் வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. கலாநிதி நீலன் திருச்செல்வம், பண்டத்தரிப்பு உப அலுவலக நிர்வாக உத்தியோகத்தர்ஆகியோருக்கும்அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (கி)

யாழ். லங்கா ஆயுர்வேத

## கல்லூரி நிர்வாகம் இன்று புதிய சபையிடம் கையளிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். லங்கா ஆயுர்வேத கல்லூரியின் தற்காலிக ஆணையாளர் குழு இன்று 15-ம் தேதி புதிய சபையிடம் நிர்வாகத்தை கையளிக்கும்.

யாழ். மாவட்ட நீதிமன்றத்தில், இக்கல்லூரி தொடர்பான வழக்கொன்றில், நீதிபதி எம். டீ. ஜேசுரத்தினம் இடைக்கால ஆணையாளர் குழுவை விலகிக் கொண்டு, இன்று 15-ம் திகதி புதிய சபையிடம் நிர்வாசத்தை கையளிக்குமாறு கட்டளையிட்டுள்ளார்.

இக்கல்லூரியை தற்காலிகமாக நிர்வகிப்பதற்கு டபிள்யூ செந்தில்நாதன் உட்பட மூவர் ஆணையாளர்களாக நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டிருந்தனர்.

கல்லூரியில் நிர்வாகம் சீர்கேடு அடைந்துள்ளதாக தெரிவித்து மாணவர்கள் பலமாதங்களாக வகுப்புகளை பகிஷ்கரித்து புதிய சபையிடம் நிர்வாகம் ஒப்படைக்கப்படவேண்டும் எனக் கோரிவந்தனர். புதிய சபை, நீதிமன்றக் கட்டளைப்படி இன்று நிர்வாகத்தை கையேற்கும். (மா

## இல்லப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை, பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி பீ. சோமசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட கல்வி அதிகாரி திரு. எஸ். தியாகராசா பிரதம விருந்தினராகவும், கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## மாவிட்டபுரம் ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. ஆலயஉற்சவ ஆரம்ப தினமான இன்று தொடக்கம் உற்சவ காலம் முடிவடையும் தினமான அடுத்த மாதம் 9ம் திகதி வரை சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் முதலுதவிச் சிகிச்சை முகாம் அங்கு பக்தர்களின் நலனை முன்னிட்டு இயங்கவுள்ளது. வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு கே.மகாதேவா சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் யாழ் மாவட்டஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பியுடன் தொடர்பு கொண்டு கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி முதலுதவிச் சிகிச்சை முகாம் ஆலய வீதியில் நிறுவப்படவுள்ளது.



[யாழ்ப்பாணம்]

கொழும்பு ஆயுள்வேத சபையின் பரீட்சையில்சித்திபெற்று சித்த ஆயுள்வேத வைத்தியராக கொல்லங்கலட்டியைச் சேர்ந்த திருமதி கோகிலா நடராசா சான்றிதழ் பெற்றுள்ளார்.

இவர் சுழிபுரம் வைத்தியாசாரியர் திரு. குணரத்தினம் சங்கரப்பிள்ளையின் மகள்.


யாழ்நகர் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விமானச்சீட்டுகள், யாழ்நகரிலே பதிவுசெய்வதற்கு நம்பிக்கையான விமான சீட்டுகள் வழங்கும் ஒரே முகவர் நிலையம்.

குரொஸ் ட்ரவல் சேவிசஸ் [பிறை] லிமிட்.

05, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

ஹொலன்ட் (HOLLAND) வழியாக இத்தாலி (ITALY) பிரான்ஸ் (FRANCE) ஆகிய நாடுகளுக்கான பிரயாணச் சீட்டுகள் மற்றும் ஜேர்மனி (GERMANY), கனடா (CANADA), சிங்கப்பூர் (SINGAPORE) ஹொலன்ட் (HOLLAND) போன்ற நாடுகளுக்கான குறைந்த கட்டண பிரயாணசீட்டுகள்; பிரயாணிகள் காசோலை, விசா (VISA)

கனடா, அமெரிக்கா செல்வதற்கு தேவையான ஒழுங்குகள்

மற்றும் பிரயாண ஒழுங்குகள் எதுவாஞலும் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்

CROSS TRAVEL SERVICES (PVT)LTD.

Approved Passenger Sales agent in Sri LanKa M/s swissair

Stage II Modern Market Ist Floor

BUS STAND CENTRE ROAD, JAFFNA. Phone 22040—22065

17-வயது கிரிக்கெட் போட்டி :

# சென். பற்றிக்ஸ் கோஷ்டி சாம்பியனுகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற, 17 வயதுக் குட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் சாம்பியன் மோதலில் சென். பற்றிக்ஸ் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இளந்து மொத்தம் 238 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஏக்பேட் 55 ஓட்டங்களையும், ரட்ண குமார் 51 ஓட்டங்களையும், ஆனந்தராஜா 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

சென். ஜோன்ஸ் கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 213 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரகுலன் 62 ஓட்டங்களைப் பெற்றுர். சென். பற்றிக்ஸ் கோஷ்டியின் பந்து வீச்சு வீரர் கிங்ஸிலி 67 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்திஞர்.

சென். பற்றிக்ஸ் 2-வது இன்னிங்ஸில் தமது விக்கெட்டுகளை மிக வேகமாக இளந்து மொத்தம் 59 ஓட்டங்களைப் பெற்றனர். சென். ஜோன்ஸ் கோஷ்டியின் பந்து வீச்சாளர் ரவீந்திரன் மிகச் சிறப்பாக பந்துவீசி 19 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்திஞர்.

இப்போட்டியில், எக்கோஷ்டி முதல் இன்னிங்ஸில் கூடுதலான ஓட்டங்களை பெற்றுள்ளதோ, அக்கோஷ்டிக்கே, வெற்றி வழங்கப்பட்டுள்ளதாக, பாடசாலை கிரிக்கெட் சங்கத்தின் காரியதரிசி திரு. எஸ். அல்பேட் சந்தியாப்பிள்ளை தெரிவித்தார். (வி)

## "யாழ்ப்பாணக் கல்லூரி சிறப்புமிக்க கல்விப் பாரம்பரியத்தை உடையது"

(பண்டத்தரிப்பு)

'வடபகுதியில் தனக்கென சிறப்புமிக்கதொரு கல்விபாரம்பரியத்தை கொண்டுள்ள இக் கல்லூரி விளையாட்டுத்துறையிலும் சாதனைகளை நிகழ்த்தி வருவது பாராட்டுதற்குரியதாகும். இங்கு நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டி கட்டுப்பாடான முறையிலும் ஒழுங்காகவும் அமைதியாகவும் நடைபெற்றது மகிழ்ச்சிக்குரியது'

இவ்வாறு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்ப் போட்டியில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் இளைப்பாறிய யாழ். மாவட்ட சுகாதாரசேவை அத்தியட்சகர் டாக்டர் பி. இரத்தினசபாபதி கூறிஞர்.

கல்லூரி அதிபர் திரு.ராஜன் கதிர்காமர் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் ஹேஸ்ரிங்ஸ் இல்லம் (சிகப்பு) 898 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைப் பெற்று வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துள்ளது. ஹிச்கொக் இல்லம் (வெள்ளை) 804 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் ஏபிரகாம் இல்லம் (பச்சை) மூன்றும் இடத்தையும் பெற்றது.

இப்போட்டிக்கான ஏற்பாடுகளை கல்லூரி ஆசிரியர் திரு. ஏ. ஆனந்தரத்தினம் மேற்கொண்டிருந்தார். (வெ)

## வங்கி முகாமையாளர்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 1ம் திகதி தொடக்கம் இலங்கை வங்கி 2 மாநகர கிளையின் முகாமையாளராக திருஇ. வில்லவராஜா கொழும்பு தலைமைச் செயலகத்திலிருந்து கடமையாற்ற வந்துள்ளார்.

இவர் முன்பு இலங்கை வங்கி வடபிராந்திய காரியாலயத்தில் உதவி முகாமையாளராகவும், பின் யாழ் சர்வதேச பிரிவின் முகாமையாளராகவும் கடமையாற்றியவர். உலக வங்கியும் இலங்கை மத்திய வங்கியும் ஒன்றிணைந்து நடாத்திய அபிவிருத்திக்கடன் நிதிமுறை பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது'

அண்மையில் ஜேர்மனியின் முதன் வங்கியான டொச் வங்கியிலும் சர்வதேச வங்கியிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றுத் திரும்பி உள்ளார்.

இவர் இங்கு பதவி ஏற்கு முன்பு கொழும்பில் அமைந்துள்ள வடபிராந்திய கடன் வழங்கும் காரியாலயத்தில் கடன்பொறுப்பதிகாரியாக கடமையாற்றிஞர்.

## சேவை நலம் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். நவாலி மகாவித்தியாலய இளைப்பாறிய அதிபர் திரு த. மார்க்கண்டுவைக் கௌரவித்து சேவை நலம் பாராட்டு விழா ஒன்று நடத்தப்படவுள்ளது. இவ்விழா பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.

அதிபர் திரு பொ. இ. சம்பந்தபிள்ளை இவ்விழாவுக்கு தலைமை வகிப்பார். சிறப்பு விருந்தினர்களாக வைத்தியக்கலாநிதி ந. சரவணபவானந்தன் வட்டாரக் கல்வி அதிகாரி திரு த. தனஞ்சயன், இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க யாழ் மாவட்டச்செயலாளர் திரு வி. எஸ். சிவபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். விசேட விருந்தினர்களாக முதலியார் வை. மகேசன், கிராமோதய சபைத் தலைவர் திரு ப. பரராஜசேகரம், சட்டத்தரணி திரு எஸ். சிவகடாட்சம் ஆகியோர் பங்குபற்றுவர். (கி)

## இன்றைய பலன்

ஆனி 31ம் திகதி

வெள்ளிக்கிழமை

(15—7—83)

மேடம்: விபத்திற்கு இடமுண்டு நிதானத்துடன் நடந்து கொள்ளவும் பல வழிகளிலும் பணம் செலவாகும் சிலர் கடன் படவும் நேரிடலாம் எதிலும் அட்டகாசம் தோன்றும்.

இடபம்: பிதாவழியிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திக்கு இடமுண்டு தெய்வ நம்பிக்கையில் ஆர்வம் பிறக்கும் புண்ணிய காரியங்களில் மனம் நாடும் நீண்டநாள் மனக்குறை இன்று நிவர்த்தியாகும்.

மிதுனம்: எதிலும் முன்னணியில் நிற்பீர்கள் பிறரின்கவனம் உங்கள்மீது செலுத்தப்படும் சொந்தமாகத் தொழில்செய்வதில் ஆர்வம்பிறக்கும் தொழில் மாற்றம் அல்லது இருப்பிட மாற்றம் உண்டு.

கடகம்: வீட்டில் மகிழ்ச்சிகரமான சம்பவங்களுக்கு இடமுண்டு முயற்சிகள் இன்று கைகூடும் விருந்துபசாரங்களும் உண்டு சிலருக்கு வாகன லாபமும் கிடைக்கலாம் மாணவர்களுக்குக் கல்வியில் முன்னேற்றம்.

சிங்கம்: கண்துடைப்புவேலைகளினுல் நலிவுக்கு இடமுண்டு குடும்பத்தில் பூசல்கள் தோன்றும் உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம்கருத்தினில்மோசம் வாட்டும் பிணியும் தானே சேரும்.

கன்னி: மோதவரும் பகை மோசடிகள் நடக்கும் சகோதர வழியால் சஞ்சலம் ஏற்படலாம் அதிக சிக்தனைக்கு இடம் கொடாது துணிவே துணைஎன இருக்கவும்,

துலாம்: இதயப்படுதாவில் இன்பக் கூத்து வாழ்க்கையில் சில காரியங்கள் நிறைந்ததாக இருக்கும் கற்றதனுல் பயன் கைமேல் கிடைக்கும் நுட்பமான வேலைகளில் ஈடுபடுபவர்கள் போற்றப்படுவார்.

விருச்சிகம்: குறைகேட்க நேரிடும் கடமையில் தடை தோன்றும் நஷ்டத்திற்கு இடமுண்டு நாவடக்கம் நன்று ஆசாரக் குறைவான சம்பவம் இடம்பெறும் கவனம் செலுத்தவும்.

தனு: உறவுகள் பலப்படும் உள்ளத்தில் உவகை உயர்வுக்கு வழி பிறக்கும் வாகனச் சாரதிகள் பொது மக்களின் நன்மதிப்பைப் பெறுவர்தொழிலாளர்களுக்கு ஊதியத்தில் உயர்வும் உண்டு.

மகரம்: வட்டிக்கடை வைத்திருப்பவர்களுக்கு அது மேலும் குட்டி போடும் பணவிவகாரங்கள் மகிழ்ச்சியைத் தரும் புத்திரர் ஒருவரின் ஆலோசனையை வாழ்த்துவீர்கள்.

கும்பம்: உங்கள் நடவடிக்கைகள் அனைத்தும் இன்று வேவு பார்க்கப்படும் தொழில் துறையில் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு சதிநடைபெறலாம் அகால போசனத்தின் மூலம் வயிற்றுக் கோளாறு ஏற்படும்.

மீனம்: வெற்றி உமது அருகில் விரைந்து வரும் எதிர்த்தவர்களே ஆதரவு தருவதற்கு முன்வருவார்கள் களஸ்திரவழியாலும் நன்மை சேரும்.

சோதிடக் கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை

## கனகரத்தினம் இல்லம் சாம்பியன்

(அரியாலை)

அரியாலை சனசமூக நிலையத்தின் 34 வது ஆண்டு விழாவையொட்டி இல்லங்களுக்கிடையே நடைபெற்ற மெய்வல்லுநர்ப் போட்டியில் கனகரத்தினம் இல்லம் 455 புள்ளிகளைப்பெற்று சாம்பியனுகியது.

சாந்தி யாழ்.
தினசரி 3 காட்சிகள்
கடைசித்தினம் 15-7-83
தியாகம்
(கலர்)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 4-15, 7-00
சனி, ஞாயிறு 1-40
முத்துராமன்—தேவிகா
நெஞ்சில் ஓர் ஆலயம்

28-7-83 வரை மட்டும்
மனோகரா (யாழ். நகர்.)
தினசரி 3 காட்சிகள்
கமலஹாசன்-ஸ்ரீதேவி
வாழ்வே மாயம்
(ஈஸ்மன்கலர்)

ஸ்ரீதர் தினசரி 10-30, 2-00, 4-30 7-00
(யாழ்ப்பாணம்)
The Empire Strikes Back
16-7-83 முதல் ரஜனிகாந் நடித்த காளி

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
பிரதாப்— சோபா
மூடுபனி

லிடோ (யாழ். நகர்)
சிவாஜி-மஞ்சுளா
மன்னவன் வந்தானடி

ராணி தினசரி 10-30, 2-30, 6-15 மட்டும்
(யாழ். நகர்)
ஜனத்திரள் நிறைந்த 8-வது வாரம்
கமலஹாசன் - அம்பிகா
சகல கலா வல்லவன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்
கே. ஆர். விஜயா
வாயாடி
விரைவில் வருகிறது
சிவகுமார்-ராதா நடித்த ஆனந்த ராகம்

றீகல்-Regal தினசரி 10-30, 2-00, 4-45 7-15 P. M.




இன்னும்
10 தினங்கள் மட்டும்
கபிர்பேடி....
சஹும் சூரி...
நடிக்கும்
"கேர்ல் (f)ப்ரம் இந்தியா"
GIRL FROM INDIA
TECHNICOLOR
இனிய நான்கு
ஹிந்திப் பாடல்கள்
உங்களை
மெய்மறக்கச் செய்யும்
வயது வந்தவர்கள் மட்டும்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம். ஜி. ஆர்—ஜெயலலிதா
நீரும் நெருப்பும்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ்- அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
நடித்த



அந்த 7 நாட்கள்
(கலர்)
கதைவசனம், டைரக்ஷன்
பாக்கியராஜ்
(இந்தியாவில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச்சித்திரம்)

# கடற்படை வீரர் மரணம்: விபத்துமரணம் என்று தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மின்சார நிலையத்தில் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியான கடற்படை வீரர் காமினிநல்லபெருமா(22வயது) மரணம் தற்செயலாக ஏற்பட்ட விபத்து மரணம் என்று யாழ்.நீதிமன்ற நீதவான் திரு. எஸ். நாகராசா தீர்ப்பளித்தார்.

காரைநகர் கடற்படை முகாமைச்சேர்ந்த காமினி நல்லபெருமா கடந்த 11ம் திகதி அதிகாலை மின்சாரநிலைய பாதுகாப்பிலீடுபட்டு தமது கடமை முடிந்து தங்கும் விடுதிக்குத் திரும்பிக்கொண்டிருக்கும்பொழுது சககடற்படை வீரரால் சந்தேகத்தின் பேரில் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டது தெரிந்ததே.

யாழ். ஆஸ்பத்திரிப் பிரேத அறையில் வைத்துப் பிரேத பரிசோதனை நடாத்திய சட்ட வைத்திய அதிகாரி எஸ். சுப்பிரமணியம் துப்பாக்கிச் சூட்டால் காயம் ஏற்பட்டு மரணம் சம்பவித்தது என்று அறிக்கை சமர்ப்பித்தார்.

இச்சம்பவம் நடைபெற்ற அன்று கடமையிலீடுபட்டிருந்த சக நான்கு கடற்படை வீரர்கள் சாட்சியமளித்தனர்.

யாழ். நீதிமன்றத்தில் மரணவிசாரணை நடைபெற்றது. (மா)

## இனந்தெரியாத சடலம் பருத்தித்துறையில் கரை ஒதுங்கியது

(புலோலி)

பருத்தித்துறை கடற்கரையில் இனம்தெரியாத வயோதிபரின் சடலமொன்று கரையொதுங்கியுள்ளது. சுமார் 70 வயது மதிக்கத்தக்க இவர் வேட்டி அணிந்திருந்தார்.

பருத்தித்துறைப் பொலிசாருக்கு தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து ஸ்தலத்துக்குச் சென்ற பொலிசார் சடலத்தை மீட்டனர்.

பருத்தித்துறை நீதவான். திரு கே. கணபதிப்பிள்ளை பிரேதத்தைப் பார்வையிட்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சடலம் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி மயிலேறும் பெருமாள் பிரேத பரிசோதனைக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. (சூ)

## இராமேஸ்வரம் கப்பல்: பாதுகாப்பு நடவடிக்கை

(மன்னார்)

இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னார் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்த கப்பல், பிரயாணிகளை இறக்கிவிட்டு பாதுகாப்புக்கருதி துறைமுகத்திலிருந்து சுமார் ஒன்றரைமைல் தூரத்தில் நங்கூரமிட்டிருந்தது.

இக் கப்பல் நேற்றுக் காலை ஏழு மணிக்குப் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு மீண்டும் இராமேஸ்வரம் புறப்பட்டது.

## யோகதாஸ் விடுதலை

(மன்னார்)

மன்னாரிலுள்ள தள்ளாடி இராணுவ முகாமில் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்த எஸ். யோகதாஸ் என்ற இளைஞர் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

இவருடைய சகோதரர் நேற்று தள்ளாடி இராணுவ முகாமுக்கு அழைக்கப்பட்டு, 3 மணித்தியாலம் விசாரணை செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார்.

## யாழ். பல்கலைக்கழக பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்து வசதியை முன்னிட்டு இம்மாதம் 18-ம் திகதி ஆரம்பமாகும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் பரீட்சை நேரங்கள் பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

முதலாவது பாடம் காலை 8 மணி தொடக்கம் 11 மணி வரை. இரண்டாவது பாடம் 12மணி - 3 மணி.

இராமநாதன் நுண்கலைப் பிரிவு: 1-ம் ஆண்டுப் பரீட்சை 13-8-83

2-ம் ஆண்டுப் பரீட்சை! 19-8-83

3-ம் ஆண்டுப் பரீட்சை: 24-8-83

இறுதியாண்டுப் பரீட்சை: 29-8-83. (மாஅ)

## மாவை

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

மேலும் வலுப்படுத்தினர். ஆகவே இக்கோயிலுக்கு வேண்டிய எல்லா மானிய ஒழுங்குகளையும் செய்து முருகவழிபாடு நன்கு நடைபெற வழி வகுத்தார். மாவை முருகன் திருக்கோயிலை யாழ்ப்பாணத்தரகர்கள் நன்கு கவனித்து வந்தனர். யாழ்ப்பாணத்தை ஆண்ட சிங்கையாரியன் மாவை முருகன் திருக்கோயிலுக்கு வந்தான் எனவும் தெரிகின்றது. ஆரியச் சக்கரவர்த்திகள் 11 பேர் என்பர் ஆய்வாளர். இவர்களில் எவர் மாவிட்டபுரம் வந்தனர் என்பது மேலும் ஆராய வேண்டிய அலுவல்.

இங்ஙனம் சீரும் சிறப்பும் பொருந்திய மாவை முருகன் திருக்கோயில் 1619 ஆம் ஆண்டளவில் போர்த்துக்கேயத் தளபதி பிலிப் தி ஒலிவீராவின் படைகளால் இடித்துத் தரை மட்டமாக்கப்பட்டது என்பர் ஆராய்ச்சியாளர். எனினும் முருகனடியார்கள் தம்தனிப் பெரும் கடவுளரை மறந்திலர். போர்த்துக்கேயருக்குப் பயந்த முருகனடியார்கள் இரவோடு இரவாகச் சென்று பூசை, மடை எல்லாம் நடத்தினர் எனவும் தெரியவருகின்றது. போர்த்துக்கேயரின் ஆட்சி இலங்கையில் 1656வரை நீடித்தது. போர்த்துக்கேயரை வெற்றிகொண்ட ஒல்லாந்தர் இந்த நாட்டை 1796 வரை ஆண்டனர். ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில் கடைசிக் கட்டத்தில் வழிபாட்டுச் சுதந்திரம் ஓரளவு வழங்கப்பட்டது. இக்காலகட்டத்திலே தான் அந்தணர் பெருமகன் குமாரசாமிக்குருக்கள், சபாபதிக்குருக்கள் 1782 இல் இக்கோயிலை மறுசீரமைத்தார். இத்துடன் ஆதினகர்த்தர்களின் பொற்காலம் தொடங்குகின்றது.

1782 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை மாவை முருகன் திருக்கோயில் பொறுப்பு யாவற்றையும் அருள்மிகு அந்தணர் பெருமக்கள் ஏற்று நடத்திவருகின்றர் என்பதையிட்டு ஈழத்து முருகனடியார்கள் பெருமையடைவர்.

# எரிபொருள் தட்டுப்பாடு: பொதுமக்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த பத்து நாட்களுக்கு அதிகமாக எண்ணை ரயில் யாழ்ப்பாணம் வராததால் எரிபொருள்களுக்குப் பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எரிபொருள்களுக்குக் கட்டுப்பாடு விதித்திருந்தும் தற்போதிருக்கும் எண்ணைவகை இரு நாட்களுக்கே போதுமானதாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோல் இரு நாட்களுக்கும், டீசல் இருநாட்களுக்கும் மண்ணை 3 நாட்களுக்கும் போதுமானதாகஇருக்கிறதாம். நிலைமையைச் சீராக்க எண்ணை ரயிலை உடனடியாக யாழ்ப்பாணம் அனுப்பிவைக்குமாறு யாழ்.அரசாங்க அதிபர் மேலதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் புகையிரதக் கூட்டுத்தாபன அதிபர், பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தலைவர் ஆகியோருடன் யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டிருந்தார்.

இதுசம்பந்தமாக யாழ். செயலகத்தில் மேலதிக உதவி அரசாங்க அதிபர்கள் மகாநாடொன்றும் நடைபெற்றது.

நேற்றுப்பகல் பூராவும் கடும் வெயிலையும் பொருட்படுத்தாது பொதுமக்கள் எரிபொருள் நிலையங்களுக்கு முன்பாக நீண்ட கியூவில் நின்றதைக் காணக்கூடியதாக இருந்தது. வான்களும் கியூவில் நின்றன. (மா)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் மாதாந்தப் பொதுக் கூட்டம் இன்று காலை யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் கொண்டுவரப்படவுள்ளன. (மா)

## வருடாந்த உற்சவம்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை அளவெட்டி கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடிவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இம்மாதம் 23ம் திகதி தேரும் 24ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

விசேஷ நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## 3 உபதபால்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றுப்பிற்பகல் இரண்டரை மணிக்கும் மூன்றரை மணிக்குமிடையில் இச்சம்பவங்கள் நடைபெற்றன.

பண்ணாகம் உப தபால் அதிபர் திரு. மா. பாக்கியநாதன் கணக்குகளைச் சரிபார்த்துக் கொண்டிருக்கையில் திடீரென உள்ளே புகுந்த நான்கு வாலிபர்களில் ஒருவர் மட்டும் கையில் ஒரு கத்தியை வைத்திருந்தாராம். தபால் அதிபரைக் கொண்டே இவர்கள் லாச்சிகளைத் திறப்பித்தனராம். லாச்சியில் இருந்த ரொக்கம் 1,220 ரூபாவை எடுத்து ஒரு கடதாசிப்பையில் போட்டுக்கொண்டு நால்வரும் இரு சயிக்கிள்களில் சித்தங்கேணியைநோக்கி ஓடி மறைந்தனராம். (அ)

## இன்று

(மானிப்பாய்)

யாழ் ஸ்கந்தவரோதயக் கல்லூரி பரிசளிப்புவிழா இன்று காலை நடைபெறவிருக்கிறது.

யாழ் பல்கலைக்கழக கல்வித் துறைத் தலைவர் பேராசிரியர் ப. சந்திரசேகரம் பரிசளிப்புப் பேருரை நிகழ்த்துவார். திருமதி க. சந்திரசேகரம் பரிசில்களை வழங்குவார். தாபகர் நினைவுரையை திரு. வ. பொன்னம்பலம் நிகழ்த்துவார். (அ)

## யாருடைய பாஸ்போட்?

பாஸ்போட் உட்படப் பல தஸ்தாவேஜுகளுடன் கூடிய கவரொன்றினை யாழ். மின்சார நிலைய வீதியைச் சேர்ந்த திரு. சி. யே. அருமைநாயகம் என்பவர் ''ஈழநாடு'' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

## வட்ட மேசை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கரவாதிகள் என்று எப்படிநாம் ஏற்றுக்கொள்ள முடியும்?'' என்று கருத்துவெளியிட்ட இவர்கள், அரசு மகுடமிடும் பயங்கரவாதத்தை ஒழிக்க அவசரகாலச் சட்டமும், ஆயுதப்படையும், ஆயுதப்படைக்கு வழங்கப்பட்டுள்ள அதிவிசேட சலுகைகளும் அமுலில் இருக்கும்போது, பயங்கரவாதத்தை ஒழிக்க ஒரு வட்டமேசை மாநாடு அவசியம்தானா?'' என்று இவர்கள் கேள்வி எழுப்பினார்கள்!

கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவருடன் நேற்றிரவு தொடர்புகொண்ட போது, இம் மகாநாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி நிச்சயம் கலந்துகொள்ளமாட்டாது என்று திட்டவட்டமாகக் கருத்துவெளியிட்டார்

இது சம்பந்தமான அறிக்கை இன்று வெளியிடப்படும் என்றும் அவர் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய பிரமுகருடன் நேற்றுத் தொடர்பு கொண்டு, வட்டமேசை மாகநாடு பற்றிக் கருத்துக் கேட்டபோது, 'தமிழ்மக்களின்பிச்ரனைபற்றிய வட்டமேசை மகாநாடு என்றால் கலந்து கொள்ளலாம். பயங்காரவாத ஒழிப்பு சம்பந்தமான வட்டமேசை மகாநாடு அவசியமற்றது. கலந்துகொள்வதில் அர்த்தமில்லை'' என்றார்.

பயங்கரவாத ஒழிப்பு சம்பந்தமான வட்டமேசை மகாநாடு இம்மாதம் 20-ம் திகதி நடைபெறும் என்று அரசு வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

## யாழ்.ரயில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

உத்தியோகத்தர்கள், பொறுப்பதிகாரிகளுக்குப் பெரும்திகில் ஏற்பட்டதாம்!

இத்துடன் இப்பகுதியில் குடியிருப்பவர்களும் பீதியடைந்த நிலையில் காணப்பட்டனர்.

இராணுவ வாகனங்கள் வந்த பாதையோரங்களில் நின்றவர்கள் பயப்பிராந்தியுடன் ஏதோ நடைபெறப்போவதாக எண்ணி அங்குமிங்குமாகச் சிதறி ஓடத்தொடங்கினர்கள்.

இந்தத் தொலைபேசித் தகவல் ஒரு அநாமதேயத்தகவலாயிருக்கலாமென நம்பப்படுகிறது. (மா)

## புனித ஹென்றி அரசர் கல்லூரி

யாழ்/ புனித ஹென்றி அரசர் கல்லூரித் தினவிழா எதிர்வரும் சனிக்கிழமை (16-7-83) காலை 9-00மணிக்கு ஆரம்பமாகும். ஆகவே இக்கல்லூரியின் பழைய மாணவர், பெற்றோர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்.

(7985)

## மரண அறிவித்தல்

### செல்வன் ஆசைப்பிள்ளை சித்திரவடிவேல்

நீர்வேலியைச் சேர்ந்த ஆ. சித்திரவடிவேல் (12-7-83) செவ்வாய் அன்று அகாலமரணமானர். இவர் ஆசைப்பிள்ளை தம்பதிகளின் அருமை மகனும், தமிழ்ச்செல்வி, நந்தினி, வவா ஆகியோரின் சகோதரனும், தம்பிஐயா, மூத்ததம்பி ஆகியோரின் பெருமகனும் ஆவர். அன்னாரின் ஈமக்கிரியை வெள்ளிக்கிழமை (15-7-83) காலை 10-00மணிக்கு நீர்வேலியில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும். (7988)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு ஜூன் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telegram: Eelanadu, Telephone: 22389—24126.